
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 நவம்பர் 19 - நவம்பர் 25 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 33




# இந்திய மக்கள் வாழ! மோடி அரசு வீழ!

## சென்னை ஆளுநர் மாளிகை முன்பு நவ. 26, 27, 28ல்

# பெருந்திரள் அமர்வுப் போராட்டம்

## மத்திய தொழிற்சங்கங்கள் - ஐக்கிய விவசாயிகள் முன்னணி அறைகூவல்

**மத்திய தொழிற்சங்கங்களும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் இணைந்து நவம்பர் 26, 27, 28 ஆகிய தேதிகளில், சென்னை ஆளுநர் மாளிகை முன்பு பெருந்திரள் அமர்வுப் போராட்டம் அறி வித்துள்ளன.**

இந்தப் போராட்டத்தில், தொமுச, ஏஐடியுசி, சிஐடியு, எச்எம்எஸ், ஐஎன்டியுசி, ஏஐயுடியுசி, ஏஐசிசிடியு, டியுசிசி, டபிள்யூபிடியுசி, எம்எல்எப், எல்டியுசி, எல்எல்எப் ஆகிய மத்திய தொழிற்சங்கங்கள் பங்கேற்கின்றன. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து, அத்தியாவசியப்பொருட்கள்மீதான ஜிஎஸ்டி வரியை நீக்கு, பெட்ரோலியப் பொருட்கள் சமையல் எரிவாயு மீதான கலால் வரியை கணிசமாகக் குறை என்பது உள்ளிட்ட 27 கோரிக்கைகள் அடங்கிய கோரிக்கை சாசனத்தை முன்வைத்துள்ளன.



### கோரிக்கை சாசனம்:

1) விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். உணவு, மருந்துகள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் இயந்திரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் மீதான ஜி.எஸ்.டி. யை நீக்க வேண்டும். பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு மீதான மத்திய கலால் வரியை கணிசமாகக் குறைத்திட வேண்டும்.
2) மூத்த குடிமக்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்களுக்கு, கொரோனா காலத்தில் பறிக்கப்பட்ட ரயில்வே சலுகைகளைத் திரும்ப வழங்க வேண்டும்.
3) உணவுப் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளித்திடு!பொது விநியோக முறையை விரிவாக்கி செயல்படுத்த வேண்டும்.
4) இலவச கல்வி, சுகாதாரம், தண்ணீர் மற்றும் உடல்நல உரிமை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## பொதுவாழ்வுப் பணியில் முன்னோடியாகத் திகழ்ந்த

# தோழர் என்.சங்கரய்யா மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செவ்வணக்கம்

**பொதுவாழ்வுப் பணியில் முன்னுதாரணமாகத் திகழ்ந்த தோழர் என்.சங்கரய்யா காலமானார். அவரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செவ்வணக்கம் கூறி இரங்கல் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவரும் விடுதலைப் போராட்ட வீரருமான தோழர் என்.சங்கரய்யா (வயது 102) இன்று (15.11.2023) சென்னையில் உள்ள மருத்துவமனையில் காலமானார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனையளிக்கிறது.

சிறு வியாபாரக் குடும்பத்தில் 1921 ஆம் ஆண்டு பிறந்த தோழர் என்.சங்கரய்யா பள்ளி மாணவப் பருவத்தில் நாட்டின் விடுதலைப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டார். கல்லூரியில் பயின்ற காலத்தில் மாணவர்களைத் திரட்டி போராடுவதில் பொது வாழ்வைத் தொடங்கினார். மதுரை மாணவர் சங்கம் உருவாக்கியதில் பெரும் பங்களிப்பு செய்தவர். இந்த அமைப்பு அனைத்திந்திய மாணவர் பெருமன்றமாக உருவாக்கப்பட்ட போது அதன் முதல் மாநிலச் செயலாளராகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் மதுரை மாவட்டத்திலும், சுற்று வட்டாரத்திலும் கட்சி அமைப்புகளையும், விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் அமைப்புரீதியாகத் திரட்டி போராடியவர். நாட்டின் விடுதலைப் போராட்டம் மற்றும் மக்கள் நலப் போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறைச் சென்றவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளராக பணியாற்றிய தோழர் என்.சங்கரய்யா, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்வு பெற்று, சிறப்பாக செயல்பட்டவர். அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராக நீண்டகாலம் செயல்பட்டவர்.



பொது வாழ்வுப் பணியில் முன்னோடியாக திகழ்ந்து வந்த தோழர் என்.சங்கரய்யாவுக்கு தமிழ்நாடு அரசு ‘தகைசால் தமிழர்’ விருது கொடுத்து பெருமைப்படுத்தியது.

சிறுவயது முதல் இறுதி மூச்சு சுவாசித்த காலம் வரை நெறி சார்ந்து வாழ்ந்து பொது வாழ்விற்கு முன்னுதாரணமாக திகழ்ந்த தோழர் என்.சங்கரய்யாவின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு செவ்வணக்கம் கூறி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு முழுவதும் மூன்று நாட்கள் செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்தும் வகையில் கட்சிக் கொடிகளை அரை கம்பத்தில் பறக்கவிடுமாறு கேட்டுக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கட்சி தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக் கடிதம்

# ஆளுநர்களின் படுபாதகங்கள்! உச்சநீதிமன்றத்தை நாட வேண்டிய அவலத்திலும் அவலம்!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**பொதுமக்கள் தாங்கள் பாதிக்கப்பட்டால், நீதிமன்றங்களை நாடிச் சென்று தங்களுக்குரிய உரிமைகளை, நியாயங்களை பெறுவதற்கு முயற்சி செய்வார்கள்.**

பணத்தை செலவழித்து, வழக்கறிஞர்கள் கேட்ட தொகையை கொடுத்து, நியாயம் பெற அல்லது உரிமைகளைப் பெற முயன்று வென்றவர்கள் உண்டு. பெரும் தொகை மட்டுமல்ல, தன்னிடம் இருந்த செல்வத்தை எல்லாம் இழந்து, இழப்பதற்கு இனி ஏதும் இல்லை என்ற நிலையில் தோற்றவர்களும் உண்டு.

இங்கே தனி நபர்கள் அல்ல, மாறாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டிய அவலம் ஏற்பட்டு வரிசை கட்டி நிற்கின்றன.

‘நாட்டின் கடந்த 75 ஆண்டுகால வரலாற்றில் மாநில அரசுகள், தாங்கள் ஆட்சி நடத்திட உதவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தை நாடிய அவலங்கள் ஏற்பட்டது இல்லை.

ஜனநாயகத் தன்மையற்று, சர்வாதிகாரத்தின் மீது பற்றும், பாசிச கொள்கை மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்ட ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசியல் பிரிவாக அவதாரம் எடுத்திட்ட பாஜக, குஜராத் போன்ற மாநிலங்களை ஆட்சி செய்திட வாய்ப்பை பெற்றது.

அம்மாநிலத்தின் முதலமைச்சராக நரேந்திர மோடி பொறுப்பேற்றார். இஸ்லாமிய மக்கள் மீது வீண் பழி சுமத்தி வெறுப்பேற்றினார். ஆர்எஸ்எஸ் வன்முறைக் கும்பல், கலவரத்தில் கைதேர்ந்த கும்பல் குழந்தைகள், பெண்கள், முதியோர் என அனைவரையும் சூறையாடியது.

மத ரீதியாக மக்களைப் பிளவுக்கு உள்ளாக்கியது. சகோதரர்களாக, மாமன் மைத்துனராக வாழ்ந்திட்ட இஸ்லாம், இந்து மக்கள் மத ரீதியாக மாநிலம் எங்கும் பிளவுபட்டனர். அத்தகைய பிளவு வகுப்பு வாத வெறி பிடித்த பாஜகவிற்கு சாதகமான நிலையை உருவாக்கியது.

தங்களின் கேடுகெட்ட ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளவும், தொடரவும் கலவரம், அதனால் ஏற்பட்ட ரத்தப் பெருக்கு, படுகாயங்கள், உயிர்ப்பலிகள்.. அனைத்தும் குஜராத்தில் பாஜகவிற்கு இன்றளவும் கை கொடுத்து வருகின்றது.

பாபர் மசூதியை இடித்து தரைமட்டமாக்கி, நாடு பின்பற்றிய மதச் சார்பின்மை கொள்கையை ஆழக் குழி தோண்டிப் புதைத்து, அங்கே ராமர் கோயில் கட்டி அழகு பார்ப்பதால் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பாஜக ஆட்சி தொடர்கின்றது.

மக்களுக்கு மதத்தின் மீதும், கடவுளின் மீதும், சாதிகள் மீதும், இன்ன பிற மூடநம்பிக்கைகளின் மீதும் உள்ள நம்பிக்கை என்கிற அறியாமையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, மக்களுக்கு மென்மேலும் மத, சாதி வெறி தீயை வளர்த்து, அதில் தாங்கள் குளிர் காய்ந்து அரசியல் ஆதாயம் தேடுகின்ற அற்பத்தனமான அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, நாட்டை ஒட்டுமொத்தமாக கலவர பூமியாக்கிவிட்டால், நாட்டையே குஜராத் ஆக்கிவிட்டால், அவர்களின் நோக்கத்தை தங்கு தடையின்றி நிறைவேற்றிக் கொள்ளலாம். நிரந்தர மாமன்னராகத் திகழலாம் என்பது அவர்களது லட்சியமாகும்.

தங்களின் லட்சியம் நிறைவேற எங்கெங்கு கலவரம் செய்திட வாய்ப்புள்ளது என்று பார்த்துப் பார்த்து கலவரம் செய்கின்றார்கள்.

குஜராத்தில் அவர்களது ஆட்சி, மோடி முதலமைச்சர், அங்கே கலவரம் மேற்கொள்ள முடிந்தது.

உத்தரப்பிரதேசத்தில் பாஜக ஆட்சி, கல்யாண் சிங் அம்மாநில முதலமைச்சர். பாபர் மசூதியை இடிக்க முடிந்தது.

பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில், அதிலும் குறிப்பாக பாஜகவின் கொள்கைகளுக்கு எதிராக, ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக உள்ள மாநில அரசுகளுக்கு எதிராக என்ன செய்யலாம்? அவர்களைப் பணிய வைக்க வேண்டும். பணிய வைக்க முடிந்த இடத்தில் பணிய வைத்து மண்டியிட வைப்பது.


தமிழ்நாட்டில் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அதிமுக ஆட்சி பாஜகவின் அடிமை ஆட்சியாகவே காலம் தள்ளியது.

புதுச்சேரியில் உள்ள ரங்கசாமி தலைமையிலான கூட்டணி ஆட்சி என்ற பெயர்தான் உள்ளதே தவிர, மாறாக அங்குள்ள துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் அவர்களின் கண் அசைவுக்கு கட்டுப்பட்ட ஆட்சியாக நடைபெற்றுக் கொண்டுள்ளது.

இத்தகைய தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை அரசுகளுக்கு மாறாக, கொள்கை ரீதியாக செயல்படக்கூடிய, ஜனநாயகம் மதச்சார்பின்மை கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் அரசுகளை மக்கள் தேர்ந்தெடுத்தனர்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளில் ஒன்று தமிழ்நாடு அரசு ஆகும். கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. திமுக பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சி, கேரளத்தில் இடதுசாரிகளின் கூட்டணி ஆட்சி, டெல்லி, பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி, மேற்கு வங்கத்தில் மம்தா தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி.




இவை எல்லாம் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் மக்கள் விரோத மசோதாக்களுக்கு ஆதரவாக இல்லை.

தங்களுக்கு உள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு எதிராக நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு எதிராக தங்களின் கருத்துக்களை வலிமையாக எடுத்துக் கூறின.

சட்டமன்றத்தில் தீர்மானங்களையும் நிறைவேற்றினர். இத்தகைய நடவடிக்கைகளை ஜனநாயக ரீதியாக ஏற்கவோ, சகித்துக் கொள்ளவோ மனம் இல்லாத மோடி அரசு தனது கோர முகத்தை காட்டியது.

தனக்கு அடிபணியாத மாநில ஆட்சிகளுக்கு தனது மிருக பலத்தை பயன்படுத்தி பல்வேறு நெருக்கடிகளை கொடுத்திட முனைந்தார் மோடி.

மிக முக்கியமாக மாநிலங்களுக்குரிய வரியைப் பெறுவதில் மாநில அமைச்சர்களும் நிதி அமைச்சர்களும் ஒன்றிய அரசிடம் மன்றாட வேண்டிய மிக மோசமான அவலம், முன் எப்போதும் இல்லாத பெரும் அவலத்தை ஏற்படுத்தினர்.

பாஜக ஆளும் மாநிலங்களுக்கு தாராளமாக நிதி வழங்கல், ஒன்றிய ஆட்சியை அரசியல் ரீதியாக எதிர்க்கும் மாநிலங்களுக்கு நிதியை குறைத்து வழங்கி நெருக்கடியை உருவாக்குதல் மிக முக்கியமானதாகும்.

ஒன்றிய அரசின் திட்டங்களை செயல்படுத்தியதற்குரிய நிதிகளைக் கூட மாநிலங்களுக்கு வழங்காமல் நெருக்கடியை உருவாக்குதல்.

மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பணிபுரியும் கிராமப்புற தொழிலாளர்களுக்குரிய ஊதியத்தைக்கூட பல மாதங்களாக வழங்காமல் முடக்கி வைப்பது போன்ற அநாகரிகமான அரசியலில் பாஜகவின் ஒன்றிய அரசு ஈடுபடுகின்றது.

இவை போதாது என்று மாநில அரசுகளை செயல்படாமல் முடக்கி வைக்கும் மூர்க்கத்தனமான செயலில் ஒன்றிய மோடி அரசு ஈடுபட்டு வருகின்றது.

தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, மாநில அரசுகளுக்கு நெருக்கடி கொடுத்திட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு எதிராக போட்டி அரசாங்கத்தை நடத்துவது போன்ற ஜனநாயக விரோதமான முறையில் செயல்பட ஆளுநர்களை பயன்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப், டெல்லி, மேற்குவங்கம், தெலுங்கானா, புதுச்சேரி மற்றும் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் உள்ள மாநிலங்கள் உட்பட, பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் தங்களுக்குரிய பணிகளை மேற்கொண்டு செயல்படுவதற்கு மாறாக, மோடியால் அனுப்பப்பட்ட அடியாட்கள் போன்று செயல்படுகின்றார்கள்.

பேரவைகளில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போடுவது; சட்டமன்றத்தை தங்களின் கால்தூசி என கருதி செயல்படுவது; மசோதாக்கள் குறித்து கேள்வி எழுப்பினால்; ஆளுநர் விருப்பம் போல் அவை குறித்து முடிவுகள் எடுக்க வானளாவிய அதிகாரம் இருப்பதாக வாய்ச்சவடால் அடிப்பது என அடாவடியாக செயல்பட்டு வருகிறார்கள்.

இதன் காரணமாக மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தை நாட வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் ஆளுநர்களின் அத்துமீறலைக் கண்டு தனது வேதனையை, கவலையை வெளிப்படுத்தி உள்ளது.

“நீங்கள் (ஆளுநர்கள்) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல” என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டி வழக்கை ஒத்திவைத்துள்ளது.

ஆளுநர்களுக்கும் மாநில அமைச்சர்களுக்கும் இடையே நடைபெறுவது தனிப்பட்ட போராட்டம் அல்ல. தனிப்பட்ட முரண் அல்ல.

ஜனநாயகத்திற்கு எதிரான, அரசியலமைப்பு சட்டத்திற்குப் புறம்பான, மாநில உரிமைகளைப் பறித்திடும் செயலாக, மாநில வளர்ச்சித் திட்டங்களை முடக்கம் செயலாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சிகளை, சட்டமன்றங்களை அவமதிப்பதாக உள்ள ஆளுநர்களின் படுபாதகத்தை எதிர்த்து நீதிமன்றத்தை மாநிலங்கள் நாடவேண்டிய அவலத்திலும் அவலம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அவலம் அடியோடு நீக்கப்பட 2024 தேர்தலில் பாடம் புகட்டத் தயாராவீர்!

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



ஆர்.ராமானுஜம்



# திரைப்படத்துறையை சிதைக்கும் திருத்தச் சட்டம்

2014ல் இருந்து நாட்டை ஆளும் பாஜக அதை மாற்றுகிறோம், இதை மாற்றுகிறோம் என்று சொல்லி, நாட்டை கந்தலாக்கி வருகிறது. இப்படி ஒரு மாற்றத்தை திரைப்படத் துறையில் சினிமாட்டோகிராப் சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவந்துள்ளது.

வசதி உள்ளவரோ, வசதி குறைவானவரோ, இந்தியச் சாமானியரின் மிக விருப்பமான பொழுதுபோக்கு திரைப்படங்கள் ஆகும். இதற்கு எந்த மாநில மக்களும் விதிவிலக்கல்ல. திரையரங்குகளின் எண்ணிக்கை, திரைப்படங்களைப் பார்க்கும் ஆட்களின் எண்ணிக்கை இடத்திற்கு இடம் மாறுபடலாம். திரைப்படங்களும், பாடல்களும், அவற்றின் தாக்கங்களும் ஆழமானவையாகவே இருந்து வருகின்றன.

இந்தத் திரைப்படங்களை கண்காணித்துச் சான்றிதழ் தர 1952 இல் இந்திய அரசு உருவாக்கிய அமைப்பே மத்தியத் திரைப்படத் தணிக்கைக் குழு (CBFC) இதில், திரைப்படத்துறையில் அனுபவம் பெற்ற கலைஞர்கள், விமர்சகர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் இடம்பெற்றிருப்பர். ஒன்றிய பாஜக அரசுக்கு இதில் மாற்றங்கள் கொண்டுவந்து நாட்டு மக்களுக்கு நன்மை புரிந்தே தீர வேண்டும் என்னும் வெறி திடீரென வய்துவிட்டது. இதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்த சட்டத் திருத்தத்தின்படி ஒரு படத்தை வெளியிட அனுமதி தரும் இறுதி அதிகாரம் மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவுக்கு (சிபிஎப்சி) கொடுக்கப்பட்டதுடன், ஒன்றிய அரசின் சட்டைப் பைக்குள் சொருகப்பட்டு விட்டது. மத்திய திரைப்படத் தணிக்கைக் குழு இறுதி அனுமதி தந்த பிறகும், ஒன்றிய அரசு அதனை நிராகரிக்கலாம். “தேச நலன்” (?) கருதி அதை மறுஆய்வு செய்யுமாறு திருப்பி அனுப்பலாம்.

ஒன்றிய அரசு அனுமதி கொடுத்து ஓடிக்கொண்டிருக்கும் ஒரு திரைப்படம் சட்டம் ஒழுங்கு, சமூக அமைதிக்கு ஊறுவிளைவிப்பதாகப் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்து புகார் வந்தாலும், அந்தப்படம் திரையிடப்படுவதைத் தடுக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கும் அது நியமிக்கும் அதிகாரிக்கும் உண்டு. (இப்படி புகார் கொடுப்பது எப்படி என்று ஆர்எஸ்எஸ், பாஜகவுக்கு சொல்லியா தரவேண்டும்?

இந்த சட்டத்திருத்தம் மூலம் மோடி அரசு நாட்டுக்கு சொல்வது, நல்ல கதையம்சம், நேர்த்தியான திரைக்கதை, எதார்த்தம், நாட்டு நடப்பு, அதன் மீதான விமர்சனம், கலையம்சம் போன்ற எவற்றையும்விட, இந்த அரசின் கொள்கைகள், விருப்பு வெறுப்புகள் இவற்றைப் புரிந்துகொண்டு அதாவது காஷ்மீர் ஃபைல்ஸ் போன்ற திரைப்படங்களை எடுக்க வேண்டும். இதற்கேற்ப இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் தயாராக வேண்டும். இல்லையேல் ஒன்றிய அரசு அதிகாரத்தின் விஷ நாக்கு “படம் எடுத்து” கொட்டிவிடும்.

தொடர்புக்கு: 94498 26636

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அனைவருக்கும் வழங்குவதை உறுதிப்படுத்து! தேசியக் கல்விக் கொள்கை, 2020ஐ ரத்து செய்ய வேண்டும்.

5) அனைவருக்கும் வீடு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
6) வன உரிமைச் சட்டத்தை (FRA) கறாராகச் செயல்படுத்த வேண்டும். வனங்களை அழிப்பதை அனுமதிக்கும், வன (பாதுகாப்பு) சட்டம், 2023க்கான திருத்தங்களைத் திரும்பப் பெற வேண்டும்.
7) உழுபவருக்கே நிலம் சொந்தம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
8) தேசிய குறைந்தபட்ச ஊதியம், மாதத்திற்கு ரூ.26,000/ என நிர்ணயம் செய்ய வேண்டும்.
9) இந்திய தொழிலாளர் மாநாட்டை மேலும் காலம் தாழ்த்தாமல் உடனே நடத்து! குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
10) பொதுத்துறை நிறுவனங்கள், அரசு துறைகளை தனியார் மயமாக்குவதை உடனே நிறுத்த வேண்டும். தேசிய பணமாக்கல் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.
11) கனிமங்கள் மற்றும் உலோகங்கள் சுரங்கம் தொடர்பான தற்போதைய சட்டத்தில் திருத்தம் செய்து, நிலக்கரி உள்ளிட்ட சுரங்கங்களில் இருந்து கிடைக்கும் லாபத்தில் 50% பங்கு, உள்ளூர் சமூகங்கள், குறிப்பாக ஆதிவாசிகள் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
12) மின்சாரம் (திருத்த) மசோதா, 2022ஐ திரும்பப் பெற வேண்டும். முன்பணம் செலுத்தும் வகையில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்த கூடாது.
13) வேலை செய்வதற்கான உரிமையை அடிப்படையாக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்பி வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்.
14) மகாத்மா காந்தி கிராமப்புற வேலை உறுதி சட்டத்தின்படி, ஆண்டுக்கு 200 நாட்கள் வேலை மற்றும் நாளொன்றுக்கு ரூ.600/ ஊதியம் வழங்கும் வகையில் திட்டத்தை விரிவாக்கி செயல்படுத்த வேண்டும். நகர்ப்புறத்துக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் வகையில் மாற்றி அமைத்து அமலாக்க வேண்டும்.
15) விவசாயிகளுக்கு விதை, உரம் மற்றும் மின்சாரத்திற்கான மானியத்தை அதிகரித்திடு!,

விவசாயிகளின் விளைபொருட்களை கொள்முதல் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி, விவசாயச் செலவை போல் 50% அதிக விலையும், குறைந்தபட்ச ஆதார விலையும் வழங்கிட சட்டபூர்வ உத்தரவாதம் கொடுத்திட வேண்டும். செலவுகளை மட்டுமே யோசித்துக் கொண்டிராமல், விவசாயிகள் தற்கொலையை தடுத்திட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட வேண்டும்.

16) கார்ப்பரேட் நலன்களை பாதுகாக்கிற பிஎம்ஜ ஃபசல் பீமா யோஜனாவை திரும்பப் பெற்று, ஒரு விரிவான பொதுத்துறை பயிர்க் காப்பீட்டை நிறுவ வேண்டும். பருவநிலை மாற்றம், வறட்சி, வெள்ளம், பயிர் சார்ந்த நோய்களால் ஏற்படும் இழப்புகளுக்கு, விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கிடும் வகையில் அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு திட்டத்தை அமலாக்க வேண்டும்.
17) அனைத்து பண்ணைக் குடும்பங்களையும் கடன் சுமையிலிருந்து விடுவிக்க, விரிவான கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்திட வேண்டும்.
18) வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தை நிறுத்தி வைப்பதற்காக, ஒன்றிய அரசு எழுதிக் கொடுத்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சிங்கு எல்லையில் போராடி உயிர் நீத்த தியாகிகளான அனைத்து விவசாயிகளுக்கும் நினைவிடம் எழுப்ப வேண்டும்.

அவர்களது குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதோடு, மறுவாழ்வளிக்க நடவடிக்கை எடுத்து நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்று ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா டேனியை தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும்.

19) நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் திரும்ப பெற வேண்டும்.
20) குறித்த கால வேலைநியமனம் (ஃபிக்ஸ்ட் டெர்ம் எம்பிளாய்மெண்ட்) முறையை ரத்து செய்ய வேண்டும்.

வேலையில் சம ஊதியத்தையும், பணியின் போது பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்.

கேஷுவல் முறையை முற்றாக ரத்து செய்ய வேண்டும்.

21) வீட்டிலிருந்து பணிபுரியும் தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், குப்பை பொறுக்குபவர்கள், வீட்டு வேலைத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், திட்டப்பணியாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கடைகள், நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், ஜிக் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், பதநீர் கள் இறக்கும் தொழிலாளர்கள், ரிக்ஷா, மாட்டு வண்டி தொழிலாளர்கள், ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள், தாயகம் திரும்பியவர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் போன்ற அனைத்து வகை அமைப்புசாரா தொழிலாளர்களையும் பதிவு செய்து, ஓய்வூதியம் உட்பட விரிவான சமூகப் பாதுகாப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும்.

இவர்கள் ஒரே தொழிலை நீண்ட காலம் செய்ய முடியாமல் வேறொரு தொழிலுக்கு மாறுபவர்கள் என்பதால், அந்தந்த தொழில்களுக்கான நலவாரியங்களில் இருந்தும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு இயல்பாக எளிதில் மாறிக்கொள்ள பொருத்தமான வழிவகை செய்ய வேண்டும்.

22) கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நலவாரியத்தில் இருந்து நிதி பங்களிப்போடு இஎஸ்ஐ திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

இஷ்ரம் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி, மகப்பேறு, ஆயுள் மற்றும் ஊனத்திற்கான காப்பீட்டை உறுதி செய்ய வேண்டும்.

23) வீட்டில் இருந்து பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் பற்றிய ஐஎல்ஓ இணக்க விதிகளை அங்கீகரித்து, பொருத்தமான சட்டங்களை உருவாக்க வேண்டும்.
24) புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய விரிவான கொள்கையை உருவாக்கி, தற்போதுள்ள மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு ஒழுங்குமுறை) சட்டம்1979 ஐ வலுப்படுத்தி விரிவான சமூக பாதுகாப்பு விதிகளோடு செயல்படுத்த வேண்டும்.
25) புதிய ஓய்வூதிய திட்டத்தை முற்றாக கைவிட்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தை மீட்டெடுத்து, அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பை வழங்க வேண்டும்.
26) பெரும் பணக்காரர்களுக்கு வரி விதித்து, கார்ப்பரேட் வரியை அதிகப்படுத்த வேண்டும்.

ரத்து செய்யப்பட்ட, செல்வ வரி மற்றும் வாரிசு வரியை மறுபடியும் அமுலாக்க வேண்டும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தையும். வாழ்விடத்தையும் பறிக்கும் கடற்கரை மேலாண்மை ஒழுங்கு படுத்தும் சட்டத்தை திரும்ப பெற வேண்டும்.


27) கருத்து சுதந்திரம், கருத்தில் வேறுபடும் உரிமை, மத சுதந்திரம், பன்முகத்தன்மை கொண்ட பண்பாடுகள், மொழிகள், சட்டத்தின் முன் அனைவரும் சமம், நாட்டின் கூட்டாட்சி முறைமை போன்ற அரசியல் சாசனத்தில் அடிப்படை விழுமியங்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நவம்பர் 26, 27, 28 மூன்று நாள் பெருந்திரள் அமர்வு சென்னை ராஜ்பவன் முன்பு நடைபெற உள்ளது.

## வினாடி - வினா

1. ‘நேட்டோ’ (NATO) என்பதன் விரிவாக்கம் என்ன? எப்பொழுது உருவாக்கப்பட்டது?
2. நேட்டோவை அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகளும் எதற்காக உருவாக்கின?
3. நேட்டோ வுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட அமைப்பின் பெயர்?
4. அணி சேரா நாடுகள் (NonAligned Movement - NAM) அமைப்பின் முதல் மாநாடு எங்கு, எப்போது நடைபெற்றது?
5. ஐ.நா. சபையின் முதல் கூட்டம் எப்பொழுது? எங்கு நடைபெற்றது?
6. குடவோலை முறை பற்றிய விவரங்கள் கொண்ட கல்வெட்டு எந்த இடத்தில் உள்ளது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 33

## ‘ஆணியே புடுங்க வேண்டாம் போ’

ஐந்து மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் துவங்கிவிட்டது. டிசம்பர் மூன்றாம் தேதி அன்று முடிவுகள் வெளிவரும்.

இந்த ஐந்து மாநில தேர்தல்கள், அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் சோதனை களம். அந்த அச்சத்தோடு, புதிய வடிவங்களில் புதிய பகுதிகளை பிஜேபி குறிவைக்கிறது.

தெலுங்கானாவில் பேசிய மோடி, ‘டாக்டர் பாபா சாஹிப் அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருதை காங்கிரஸ் அரசு வழங்கவில்லை. நாடாளுமன்றத்தில் அவர் படத்தை கூட வைக்கவில்லை’ என்று குற்றம் சுமத்தினார்.

உண்மையில் பாபா சாகேப்புக்கு பாரத ரத்னா விருது வழங்கியதும், நாடாளுமன்றத்தில் படம் வைத்ததும் வி.பி.சிங்கின் தேசிய முன்னணி அரசு. பிஜேபி அல்ல.

மத்திய பிரதேசத்தில் அமித்ஷா “காங்கிரஸ் கட்சி பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களை அலட்சியப்படுத்தி விட்டது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை கிடப்பில் போட்டது” என்று பேசுகிறார்.

மண்டல் கமிஷன் பரிந்துரையை அமலாக்கியதும் வி.பி.சிங் அரசுதான். அதனை எதிர்த்து இந்தியாவின் வடக்கு, மேற்கு மாநிலங்களில் மிகப்பெரும் கலவரங்கள் கட்டவிழ்க்கப்பட்டன. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு இட ஒதுக்கீடு தருவதை எதிர்த்து ஏன் கலாட்டா செய்கிறீர்கள் என்று பாஜக ஒரு வார்த்தை பேசியதில்லை.

‘எங்களைக் கேட்காமலேயே விபி சிங் முடிவு எடுத்து விட்டார்’ என்று பிஜேபி தலைவர் அத்வானி எண்ணெய் ஊற்றி எரியச் செய்தார்.

1990 ஆகஸ்ட் 7ல் மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டது. செப்டம்பர் 12ஆம் தேதி ரத யாத்திரையை அத்வானி அறிவித்தார். ரதம் சென்ற இடமெல்லாம் கலகங்கள் மூண்டன. தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அத்வானி கைது செய்யப்பட்டவுடன், விபி சிங் அரசுக்கு தந்த ஆதரவை பிஜேபி திரும்ப பெற்றது.

பிற்பட்ட மக்களுக்கு உரிய இடத்தை தந்ததற்காக அரசியல் வாழ்க்கையை இழந்து நவம்பர் 7ல் ஆட்சியில் இருந்து வெளியேறினார் வி பி சிங். பேசுவதற்கு பிஜேபிக்கு என்ன அருகதை இருக்கிறது?

மத்திய பிரதேசத்துக்கு மன்மோகன் சிங் அரசு 2 லட்சம் கோடிதான் தந்தது. ஆனால் பிஜேபி கூடுதலாக 5 லட்சம் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்கிறார் அமித்ஷா. அதிக வசூல் தமிழ்நாட்டில், அதைக் கொட்டிக் கொடுப்பது வடநாட்டில் என்பதைத்தான் தமிழ்நாட்டுக் கட்சிகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அமித்ஷாவே அதை ஒத்துக் கொண்டு விட்டார். அண்ணாமலை தன் முகத்தை எங்கு போய் வைத்துக் கொள்வார்?

சத்தீஸ்கரில் ஒன்றிய அமைச்சரான தர்மேந்திர பிரதான் பரப்புரைக்குச் சென்றார். ‘மோடியின் தேசிய கல்வி கொள்கையால், இனி எட்டாம் வகுப்பு வரை தாய் மொழியான சத்தீஸ்கரியில் படிக்கலாம். தாய்மொழியில் படித்தால்தான் படைப்பாக்க சிந்தனை விரிவடையும், ஆய்வுகள் நடத்தவும் தர்க்கரீதியான திறன் பெறவும் தாய் மொழி கல்விதான் ஆற்றல் தரும்’ என்று பேசியுள்ளார்.

இதைத்தானே தமிழ்நாட்டிலும் சொல்கிறோம். இங்குள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளிலும் தமிழைச் சொல்லிக் கொடுங்கள் என்று கேட்பதை நேற்று வரை குறை சொன்னார்கள்.

மத்திய பிரதேச மக்களுக்கு அமித்ஷா ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறார். அயோத்தியில் ராமர் கோவில் கட்டி முடித்தவுடன் ம.பி. மக்களை பிஜேபி அரசு இலவசமாகவே கூட்டிச் செல்வோம் என்பது அவரது வாக்குறுதி.

அது மட்டுமல்ல பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமை தொகை, மாணவர்களுக்கு பேருந்துகளில் இலவச அனுமதி என்று தமிழ்நாட்டின் பல திட்டங்களை இப்போது அங்கு வாக்குறுதியாக தந்திருக்கிறார்கள்.

2016, மே 11ல் தமிழ்நாட்டுக்கு வந்த ராஜ்நாத் சிங், பிரகாஷ் ஜவடேகர் ஆகியோர், திமுக, அதிமுக ஆட்சிகளை அவற்றின் இலவச திட்டங்களுக்காக வறுத்தெடுத்தார்கள்.

“50 ஆண்டுகளாக மாநிலத்தை திராவிட கட்சிகள் சீரழித்துள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 11,600 கோடி ரூபாய் இலவச திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்டு இருக்கிறது” என்றார்கள்.

மாணவர்களுக்கு சீருடை, மதிய உணவு, பேருந்து பயணம், மிதிவண்டி, மடிக்கணினி மற்றும் தொலைக்காட்சி பெட்டி, அரிசி என சமூக முன்னேற்றத்திற்காக செய்த செலவுகளை மாநிலத்தை குட்டி சுவராக்கும் திட்டங்கள் என்று பேசிய கட்சி அது. இப்போது ராமர் கோவிலுக்கு இலவசமாக கூட்டிச் செல்ல போகிறது, ஆட்சி அமைந்தால்!

‘ஆணியே புடுங்க வேண்டாம் போ’ என்று மக்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப் போகிறார்கள்.

# விவசாயிகளை தேச விரோதிகள் என்று கூறும் மோடி அரசு

**டெல்லி போராட்டத்துடன் இந்தியா முழுதும் நடைபெற்ற விவசாயிகளின் உணர்வு பூர்வமான போராட்டங்களுக்கு எதிராக, நியூஸ்கிளிக் மீதான எஃப்.ஐ.ஆரில் ஆதாரமற்ற நேர்மையற்ற மற்றும் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறிய நரேந்திர மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ், பாஜக அரசுக்கு தனது கண்டனத்தை எஸ்.கே.எம் அறிவித்துள்ளது.**

வெளிநாடு மற்றும் பயங்கரவாத சக்திகளிடம் இருந்து நிதியை பெறும் விவசாயிகள் இயக்கம். இது தேச விரோதமானது என எஃப்.ஐ.ஆரில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விவசாயிகள் இயக்கம் ஒரு உறுதியான நாட்டுப்பற்று உள்ள இயக்கமாகும். விவசாயம், மண்டிகள் மற்றும் உணவு விநியோகத்தை அதானி, அம்பானி, டாட்டா, கார்கில், பெப்சி, வால்மார்ட், பேயர், அமேசான் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தாரை வார்த்து கொடுப்பதற்கு வகை செய்யும் மூன்று வேளாண் சட்டங்களின் மோசமான நிலைகளைவிவசாயிகள் இயக்கம் சரியாக புரிந்து கொண்டதால் தான் போராட்டம் நடந்தது.

மூன்று வேளாண் சட்டங்கள் கம்பெனிகள் வழங்கும் விளைப் பொருட்களைத்தான் விவசாயிகள் பயிர் செய்திட வேண்டும் என்ற ஒப்பந்தச் சட்டம், விலை கூடுதலான இடுபொருட்கள், விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், எரிபொருள், நீர்ப்பாசனம், தொழில்நுட்பம், சேவைகளை பெறுவதுடன், மகசூலை அந்த நிறுவனங்களிடமே விற்கவும் ஒப்பந்தம் போடப்படும். அரசு கொள்முதல் மற்றும் விலைநிர்ணயம் ஆகியவற்றை இந்த சட்டம் தடை செய்கிறது. இதன் மூலம் இணையதள வலை பின்னல் மற்றும் தனியார் சிலோஸ் எனப்படும் ராட்சச கிடங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, குறைந்த விலையில் தானியங்களை வாங்கிட வர்த்தகத்தில் பெரிய நிறுவனங்களை ஆதிக்கம் செலுத்த வழி வகை செய்யப்படுகிறது. அத்தியாவசிய பொருட்கள் திருத்தச் சட்டம் என்பது பதுக்கல்காரர்களுக்கும் கருப்பு சந்தைக்காரர்களுக்கும் சுதந்திரம் அளிப்பதாகும்.



தஞ்சாவூரில் நகல் எரிப்பு

இந்திய விவசாயிகள் இயக்கம் இந்த சூழ்ச்சியை புரிந்துதான் ஆர்.எஸ்.எஸ்பி.ஜே.பிகார்ப்பரேட் கூட்டு, இந்திய மக்களின் உணவு பாதுகாப்பை பறிக்கும் திட்டத்தை அம்பலப்படுத்தியது. மேலும் விவசாயிகளை ஏழைகள் ஆக்குவது, கார்ப்ரேட்களுக்கு ஏற்றவாறு பயிர்முறையை மாற்றுவது மற்றும் இந்தியாவின் உணவு பதப்படுத்தும் சந்தையில் பன்னாட்டு நிறுவனங்களை ஊடுருவ அனுமதிப்பது ஆகியவற்றையும் அம்பலப்படுத்தியது. கடலின் பேரலையாக விவசாயிகள் ஓங்காரமாய் புறப்பட்டு டெல்லியை சுற்றி வளைத்து பிடிவாதமாக இருந்த மோடி அரசை பின்வாங்க வைத்தனர்.

இந்தப் போராட்டத்தில் தண்ணீர் பாய்ச்சும் பீரங்கி, கண்ணீர் புகை குண்டுகள், பெரிய சாலை தடுப்புகள், ஆழமான சாலை குழிகள், லத்தி சார்ஜ், குளிர் மற்றும் வெப்பமான காலநிலை ஆகியவற்றை தைரியமாக விவசாயிகள் எதிர் கொண்டனர். 13 மாதங்களில் 732 பேர் தியாகிகளாய் உருபெற்றனர். ஊடகங்கள் மற்றும் நீதிமன்றங்களில் நீதிக்காகவும் குரல் கொடுத்தனர். ஏகாதிபத்திய சுரண்டல்காரர்களின் நலன்களுக்காக சேவை செய்யும் பாசிச அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர் கொண்டு மிக உயர்ந்த தரமான தேச பக்தி இயக்கமாக இதை மாற்றினர்.

இந்திய விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் 140 கோடி மக்களுக்கு உணவளிக்கின்றனர். அவர்கள் 68.6 சதம் மக்களுக்கு வாழ்வாதாரத்தையும், வேலை வாய்ப்பையும் வழங்குகிறார்கள். விவசாய உள்கட்டமைப்பில் அரசு முதலீடு செய்வதானது லாபகரமாக விவசாயத்தை மேம்படுத்துதல், கிராம ஏழைகளின் வாழ்க்கை மேம்பாடு, நவீன உணவு பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், நுகர்வோர் வலையமைப்பை எளிதாக்குதல், விவசாயிகள் தொழிலாளர்கள் கூட்டுடமை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் மக்களின் பொருளாதாரத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும்.



பி.எஸ்.மாசிலாமணி

இந்த நிலையில் விவசாயிகள் இயக்கத்தை ஆதரித்து எழுதிய நியூஸ் கிளிக் மீடியா ஹவுஸ் மீது...உபா சட்டத்தை பயன்படுத்தி உள்ளனர். ஒரு உண்மையான ஊடகம் செய்ய வேண்டிய கடமையை மட்டுமே இது செய்தது. அதாவது உண்மையை செய்தி ஆக்கியது. விவசாயிகளின் பிரச்சனைகள் மற்றும் ஒன்றுபட்ட போராட்டம் பற்றிய செய்திகளை வெளியிட்டது. விவசாயிகளின் இயக்கம் மக்களுக்கு எதிரானது, தேசவிரோதமானது, நியூஸ் கிளிக் மூலம் பயங்கரவாதிகளின் நிதிஉதவியில் ஆதரிக்கப்பட்டது என்ற கேலிகூத்தான எஃப். ஐ. ஆர் ஐ பாஜக அரசு போட்டுள்ளது. இது உண்மையில் தவறானது, விஷமத்தனமானது, கண்டிக்கத்தக்கது.

நம் நாட்டின் விவசாயிகளால் பா.ஜ.க. அரசு அடைந்த அவமானகரமான தோல்விக்கு பழிவாங்க முயல்கிறது போலும்.

இந்த நிலையில் ஆர்.எஸ். எஸ்.. மற்றும் பிஜேபியும், விவசாயத்தில் வெளிநாட்டு எம்.என்.சி க்கள் மற்றும் பெரிய நிறுவனங்களின் முதலீடுகளை ஊக்குவித்து, இந்திய விவசாயிகளை பயனற்றவர்களாக ஆக்குவதிலும் அழிப்பதிலும் அவர்கள் ஆழமான உறுதியுடன் உள்ளனர். விவசாயிகளின் பொருளாதாரத்தை காப்பாற்றவும், வெளிநாட்டு கொள்ளையை தடுக்கவும், கிராம பொருளாதாரத்தை புதுப்பித்து வலிமையான இந்தியாவை கட்டியெழுப்புவதிலும் எஸ்.கே.எம். உறுதியாக இருக்கிறது.

ஊடக செய்தி நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பொய்யான எஃப். ஐ. ஆர். குறித்து புதுடெல்லியில் நடைபெற்ற எஸ். கே. எம்ன் பொதுக்குழு கண்டனம் தெரிவித்ததுடன் எஃப். ஐ. ஆர் ஐ உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும், செய்தியாளர்களான பிரபீர் புர்காயஸ்தா, அமித் சக்ரவர்த்தி ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதை வலியுறுத்தி 2023 ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் தேதி அகில இந்திய எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட மற்றும் பொய்யான எஃப். ஐ. ஆர். இன் நகல்களை தாலுக்கா மற்றும் தலைமை இடங்களில் எரித்துள்ளது.

மேலும் கார்ப்பரேட்டுகளை எதிர்ப்போம், பாஜகவை தண்டிப்போம், நாட்டை காப்போம் என்ற முழக்கத்துடன் தேர்தல் நடக்க இருக்கின்ற ஐந்து மாநிலங்களில் பிரச்சாரம் செய்யவும் முடிவு செய்துள்ளது. 2023 நவம்பர் 26 முதல் 28 வரை விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் மகத்தான பங்கேற்புடன் அனைத்து மாநில தலைநகரங்களிலும் ஆளுநர் மாளிகைகள் முன் 72 மணி நேரம் இரவு பகல் என காத்திருப்பு போராட்டம் நடைபெற உள்ளது.

# வேலைவாய்ப்பில்லா வளர்ச்சி



அருண் நெடுஞ்செழியன்

**குஜராத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரதமர் மோடி "இந்தியாவின் வளர்ச்சி குறித்து உலகமே விவாதிக்கிறது" என பெருமை பொங்க உரையாற்றினார்.**

மற்றொரு தருணத்தில் பிசினஸ் டுடே என்ற பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியின் போது மற்ற நாடுகளைவிட இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது என்றும் இதுவரை இல்லாத அளவிலான வளர்ச்சியை சாத்தியப்படுத்துகிற வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார்.

முன்னதாக, சுதந்திர தின உரையில் பேசிய பிரதமர் மோடி, 2014 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் இந்தியா பத்தாவது இடத்தில் இருந்ததாகவும், தற்போது உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக வளர்ந்துள்ளதாகவும் அடுத்த ஐந்தாண்டுகளில் மூன்றாவது இடத்திற்கு கொண்டு செல்லப்போவதாகவும் ஆவேசமாக உரையாற்றினார். ஆனால் நடைமுறையிலோ மோடி குறிப்பிடுகிற வளர்ச்சிக்கு எந்த புள்ளிவிவர அடிப்படை ஆதாரமும் இல்லை என்ற விமர்சனங்கள் எழுந்தது. மாறாக பாஜக அரசின் ஆட்சியில் வேலைவாய்ப்புகள் வேகமாக குறைந்து வருவதை புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அண்மையில், இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் ((சி.எம்.ஐ.இ) ஆய்வின்படி இந்தியாவில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 2021 டிசம்பரில் 8 விழுக்காடாக உயர்ந்துள்ளதாகவும் (அதாவது சுமார் 5.3கோடி பேர்) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 7 விழுக்காடாக இருந்ததாகவும் குறிப்பிடுகிறது.

2020 ஆம் ஆண்டில் வேலையில்லா திண்டாட்டத்தில் தற்கொலை செய்து கொண்டோர்களின் எண்ணிக்கை 3548 ஆக உயர்ந்துள்ளது. இந்த எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 2,851 ஆக இருந்தது. இந்த புள்ளிவிவரங்கள் நாடாளுமன்றத்தில் அரசு தெரிவித்தது ஆகும். உண்மையான எண்ணிக்கை ஆவணங்களில் காட்டப்படுவதைத் தாண்டி பல மடங்கு இருக்கும்.

பிரதமர் மோடி குறிப்பிடுவது போல வேகமான பொருளாதார நாடாக இந்தியா வளர்ந்திருந்தால் ஏன் வேலைவாய்ப்புகள் உருவாகவில்லை? ஏன் வேலைவாய்ப்பில்லா தற்கொலைகள் அதிகரிக்கின்றன? இந்த இரண்டு கேள்விகளுக்கான விடையில்தான் இந்தியாவின் எதிர்காலம் உள்ளது. ஆனால் பொதுவாக இந்தியாவின் முதலாளித்துவ பொருளாதாரவாதிகளும் ஆளும் கட்சிகளும் இது குறித்து அதிகம் அக்கறை செலுத்துவதில்லை.

## இந்தியாவின் "வளர்ச்சி" மாதிரி

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்து பேச வேண்டும் என்றால், முதலில் இந்தியாவின் வளர்ச்சி மாதிரியின் பண்புகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். பொதுவாக ஒரு நாடு விவசாயத் துறையில் நீடித்து பின் தொழிற்துறையில் வளர்ந்து, சேவைத்துறை சார்ந்த வளர்ச்சியாக பொருளாதாரத்தில் முன்னேறுவது என்பது பொதுவான வளர்ச்சிப் படிநிலைகளாக உள்ளது. உதாரணமாக, ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் இந்த வளர்ச்சிப் படிநிலைகளைக் காணலாம்.

இந்தியப் பொருளாதாரமோ விவசாயத் திலிருந்து நேரடியாக சேவைத்துறை சார் பொருளாதாரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதிக வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய தொழிற்துறையில் இந்தியா தேக்கம் அடைந்திருப்பதால், இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரிக்கின்றது. அதாவது அதிகத் திறன் தேவைப்படுகிற மென்பொருள், நிதி போன்ற துறைகளில் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். மாறாக குறைந்த திறன் அல்லது திறனற்ற அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களை இந்த சேவை சார் பொருளாதாரத்துக்குள் வர இயலவில்லை. இவர்களுக்கு தகுந்த உற்பத்தித் துறை சார் தொழிற்பணிகள் குறைவாக இருப்பதால், வேலையில்லா பட்டாளம் ஒன்று மிகப்பெரிய அளவில் உருவாகிறது.

கடந்த 1970களில் இந்திய பொருளாதாரத்தில் தொழிற்துறையில் பங்கு 24 விழுக்காடாக இருந்தது. 202122 ஆம் ஆண்டில் இந்த பங்கு வெறும் மூன்று விழுக்காடு அதிகரித்து 27 விழுக்காடாக உள்ளது. அதேநேரத்தில் இந்தியாவின் பொருளாதாரத்தில் சேவைத்துறையின் பங்கு தற்போது 48 விழுக்காடு உள்ளது. மாறாக தற்போது சீனாவின் பொருளாதாரத்தில் தொழிற்துறையில் பங்கு 41 விழுக்காடாகவும் சேவைத்துறையில் 51 விழுக்காடாகவும் உள்ளது. சீனாவின் பொருளாதாரத்தில் வேளாண் துறையின் பங்கு வெறும் 8 விழுக்காடு மட்டுமே உள்ளது. 1970 களில் சீனப் பொருளாதாரத்தில் வேளாண்துறையின் பங்கு 32 விழுக்காடு இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலே அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஈடுபடுகிற வேளாண்துறையின் பங்கு தற்போது 17 விழுக்காடாக உள்ளது. அதாவது இந்திய மக்கள் தொகையில் சுமார் 44 விழுக்காட்டு மக்கள் வேளாண்துறை சார்ந்த பொருளாதாரத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் வேளாண்மையின் உற்பத்தித் திறனும், வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் தனி நபர் வருமானமும் குறைவாகவே உள்ளது. இந்த முரண்கள் தீர்க்கப்படவில்லை என்றால் வேளாண்துறையின் வீழ்ச்சியும் வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பும் தீர்க்க முடியாத சிக்கலாக நீடிக்கும்.

பொருளாதார வளர்ச்சி மாதிரியில் வேளாண்மையை நவீனப்படுத்தி உற்பத்தியை பெருக்குவதும், தொழில்துறை உற்பத்தியை ஊக்கப்படுத்தி வேலை வாய்ப்பை உருவாக்குவதும் அடிப்படையாக உள்ளது. அதனாலேதான் அமெரிக்காவில் தனி நபர் வருமானம் இந்தியாவில் உள்ளதை விட 70 விழுக்காடு அதிகமாக உள்ளது.

**இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஜிடிபி கொண்டு பேசினால் பெரிய பொருளாதாரமாக தோற்றமளிக்கும். 5 டிரில்லியன் டாலர் ஜிடிபி வளர்ச்சி இலக்கு, 6 விழுக்காடு ஜிடிபி வளர்ச்சி விகிதம் என "எண்களில்" வேண்டுமானால் வித்தை காட்டலாம். மாறாக நடைமுறையிலே ஒரு சில வேலைகளுக்கு பல பத்தாயிரம் பேர் போட்டிபோடுவதும், தற்கொலைகளும் தான் அதிகரிக்கின்றன.**

அண்மையில் உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தியாவில் தீபாவளியை கொண்டாடும் வகையிலும் ராமர் கோயில் திறப்பு விழாவை ஒட்டியும், சரயுநதிக்கரையில் 22 லட்சம் தீபங்கள் ஏற்றப்பட்டன. இந்த நிகழ்வு கின்னஸ் உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டது. ஆர்.எஸ்.எஸ் பாஜகவினர் இந்த நிகழ்வை வானளாவப் புகழ்ந்தனர். ஆனால் நிகழ்ச்சி நடந்து முடிந்த சில நேரங்களில் நதிக்கரையில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் விளக்குகளில் இருந்து சில குழந்தைகள் எண்ணெயை எடுத்து பாத்திரங்களில் ஊற்றிக் கொண்ட வீடியோ வைரலாக பரவியது.

விளக்கேற்றும் எண்ணெயை மீண்டும் பயன்படுத்தவே முடியாது எனத் தெரிந்தும் மக்கள் அதையும் பயன்படுத்த எடுத்துச் செல்வதைப் பார்த்தால் எண்ணெய் வாங்க கூட வழியற்ற அவல நிலையில் தான் மக்களை உத்தரப்பிரதேச பாஜக அரசு வைத்திருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் பாஜக அரசோ அயோத்தியில் ராமர் கோயில் கட்டினால் தரிசனம் இலவசம் என அறிவிக்கிறது. மக்களின் வறுமையை பக்தி முலாம் பூசி ஏமாற்றுகிற பாசிச கும்பல், ஆட்சியில் இருக்கிற வரையிலே இந்த கொடுமைகளுக்கு ஒரு விடிவு காலம் ஏற்படாது.

மக்களின் எதார்த்த நிலை பரிதாபகரமாக இருக்க, ஆளும் பாசிச கும்பலோ புதிய இந்தியா பிறந்துவிட்டது என்றும் இந்தியா வளர்ந்து விட்டது என்றும் பொய்யும் புரட்டுமாக மேடைக்கு மேடை தோறும் பேசி வருகிறது. இதையேதான் வாஜ்பாய் காலத்தில் இந்தியா ஒளிர்கிறது என பிரச்சாரம் செய்தார்கள். ஆர்எஸ்எஸ் பாஜக எப்போதுமே பொய் பேசுவதற்கு அஞ்சுவதில்லை. அவர்களது வரலாறே பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்ததாகும். உணர்ச்சிகரமாக உரையாற்றுகிற திறனை வளர்ப்பதில் ஆர்எஸ்எஸ் எப்போதுமே அதிக அக்கறையும் முனைப்பும் செலுத்தும். அந்த வகையில் இன்றைய பிரதமர் மோடி ஆர்எஸ்எஸ் பட்டறையில் வார்க்கப்பட்டவர் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தியாவிலே அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதிலும் காப்பாற்றுவதிலும் மேடைப் பேச்சு முக்கிய பங்காற்றுவதை வரலாற்றில் காண்கிறோம். அந்த வகையில் இன்றைய பிரதமர் மோடியின் மேடைப் பேச்சு திறனை வளர்ப்பதில் கடந்த காலத்தில் ஆர்எஸ்எஸ் மேற்கொண்ட முயற்சிகளும் பயிற்சிகளும் கச்சிதமாக தற்போது அரசியல் களத்தில் வேலை செய்கிறது.

அதேநேரத்தில் ஆர்எஸ்எஸ் பாஜக கும்பலின் பிரச்சாரங்களுக்கு தகுந்த பதிலடி கொடுத்து முறியடிப்பது ஜனநாயக சக்திகளின் முக்கியப் பணியாக உள்ளது. மோடியின் "வளர்ச்சி" முழக்கம் குறித்த பொய் பித்தலாட்ட பிரச்சாரங்களை மெய்யான புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு மக்களிடம் அம்பலப்படுத்துவதே ஜனநாயக சக்திகளின் உடனடி கடமையாகும்.






வேலை தேடுவோர்




தொடர்புக்கு : 98423 91963

# சமூக நீதி வேடம் போடும் மோடி!



த.லெனின்

**இன்று சமூகநீதி மீது திடீர் காதல் கொண்டு பேசி வரும் காவிகளே, மண்டல் கமிஷன் பரிந்துரையான வேலை வாய்ப்பில் 27% இட ஒதுக்கீட்டை முதன்முறையாக ஒன்றிய அரசின் துறைகளில் அமல்படுத்தினார் அன்றைய பிரதமர் வி.பி.சிங்!**

அதற்காகவே, அவரது ஆட்சியை அகற்ற வெளியிலிருந்து கொடுத்த தனது ஆதரவை விலக்கிக் கொண்டு கவிழ்த்தது பா.ஜ.க.!

### மருத்துவ உயர் கல்வியில் இடஒதுக்கீட்டிற்கு எதிராக

அது பழைய நிகழ்வு என்றால் பிரதமர் மோடி அரசு 27 % இட ஒதுக்கீட்டினை தமிழ்நாடு மருத்துவ உயர்கல்வி இடங்களில் ஒதுக்குவது சம்பந்தமாக தி.மு.க.வும், மருத்துவ அமைப்புகளும்









கூட்டணிக் கட்சிகளும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்து, தீர்ப்புப் பெற்றும், அதனை செயலாக்க மறுத்தது ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசு. பிறகு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று வாதாடி, உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகே 27% இடங்களைப் பெற்றது, இதிலிருந்து பா.ஜ.க. வின் சமூகநீதி எப்படிப்பட்டது? என்பது விளங்கும்! இதன் மூலம் சுமார் 5000 இதர பிற்பட்ட மாணவர்கள் தங்களது உயர்கல்வி வாய்ப்பை பறிகொடுத்தனர்

ஆனால் இந்த உச்சநீதி மன்றத் தீர்ப்பிறகு பிறகு ஒன்றிய அரசின் வழக்கறிஞர்கள் மருத்துவ மேற் கல்வியில் இடஒதுக்கீடு கூடாது என வாதிட்டுவிட்டு கூச்சமே இன்றி மோடிதான் மருத்துவ உயர்கல்வியில் இடஒதுக்கீட்டை பெற்றுத் தந்தார் என பெருமை பேசினார்கள் என்றால் அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது விளங்கும்!

உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் தலித்,பழங்குடிகள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்று திடீர்ப் பாச மழை பொழியும் இந்த மோடி ஆட்சியில், உச்ச, உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகளில் கொள்கை முடிவு எடுத்து பிற்படுத்தப்பட்ட வர்களை,தலித்துகளை உயர் பதவிகளில் உச்சநீதிமன்றத்தில் அமர்த்துவதை யார் தடுத்தது?

உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக அனுபவம் வாய்ந்த பல மூத்த நீதிபதிகள் இருந்தும், அவர்கள் பெயரை பரிந்துரைக்காமல் உயர்சாதி நீதிபதிகளைத்தான் நியமித்தனர்

இங்கெல்லாம் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த சமூக நீதி பேசும் மோடியும் சங்கிகளும் முயலாதது ஏன்?

ராகுல் காந்தி குறிப்பிட்டதை போல ஒன்றிய அரசின் 100 துறைகளின் தலைமை உயர் அதிகாரிகளில் மூன்று பேர்தான் பிற்பட்ட ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சார்ந்தவர்கள் 97 பேர் உயர்சாதிகளை சார்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு ஒன்றிய அரசின் பதில் என்ன? இவற்றில் எல்லாம் ஒடுக்கப்பட்ட சமூகங்களை சார்ந்தவர்களை தலைமைப் பொறுப்புக்கு கொண்டுவர அவர்களுக்கான சமூக நீதியைநிலைநாட்ட கடந்த 10 ஆண்டுகளாக மோடி அரசு என்ன செய்தது சொல்ல தயாரா?

இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஐ. ஐ. டி., என். ஐ. டி., ஐ. ஐ. எம். மற்றும் எய்ம்ஸ் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் இன்று வரை இட ஒதுக்கீட்டு முறை சமூக நீதி கடைபிடிக்கப்படுவதில்லையே! அவற்றை சரி செய்ய இந்த ஆட்சி செயல்பட்ட விதம்தான் என்ன?

### மனுவாத ஆட்சியே நிகழ்ச்சி நிரல்!

விஸ்வகர்மா சம்வான் அபியான் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அது குலத் தொழிலை புதுப்பிப்பதற்கான ஒரு சதி என்பதை தவிர வேறு என்ன? உயர் வகுப்பினருக்கு சேவையாற்றும் சாதிகள், சூத்திர சாதிகளை சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி பெற்று நவீன தொழில்களுக்கு செல்லாமல் பாரம்பரிய தொழில் என்ற பெயரில் அதிலேயே அவர்களை முடக்கி வைப்பதற்காக அன்றைக்கு ராஜாஜி செய்த குலக்கல்வி முறையைத்தான் இன்று மோடி அரசும் செய்கிறது.

இவர்கள் உயர்கல்வி பெற்று நாட்டின் உயர் பதவிகளில் ஏன் பொறுப்பு ஏற்க கூடாது? சரி அப்படியே இது சரி என்றாலும் உயர் சாதியைச் சார்ந்தவர்கள் தங்களது பாரம்பரிய தொழிலை மட்டும் செய்து அரசு பணிகளை கைவிடுவார்களா என்றால் அதற்கு வழி இல்லை அப்படி எனில் இருக்கும் அனைத்து பணி வாய்ப்புகளையும் உயர் பொறுப்புகளையும் அவர்களுக்கே வாரி வழங்கும் மனுதர்ம முறைதான் அவர்கள் மனதில் நிழலாடும் நடைமுறை கொள்கை, நிகழ்ச்சிநிரல்! என்பதையும் இவையெல்லாம் உறுதிப்படுத்துகிறது.

### ஆர்.எஸ்.எஸ்சின் ஒரிஜினல் டி.என்.ஏ!

மோகன்பகவத் இட ஒதுக்கீடு வேண்டும் என்று பேசுகிறார் அத்துடன் இட ஒதுக்கீடு கொடுப்பது என்பது பொருளாதார சலுகை அல்ல அது சுயமரியாதை பிரச்சனை என்கிறார். சமூக ரீதியான ஒடுக்குமுறைக்கு எதிராக இப்படி பேசும் அவர்தான் கடந்த 2015 ஆண்டு இட ஒதுக்கீடு குறித்து ஒரு மறு விவாதம் தேவை என பேசியவர். இதைக் கருத்தில் கொண்டால் வாக்கு அறுவடைக்கு அவர்கள் இரட்டை நாக்கில் பேசுவதும் முன்பு அவர்கள் எடுத்த நிலைப்பாட்டுக்கு நேர் எதிராக மாறுவதிலும் என்றும் வகுப்புவாத பாசிஸ்ட்டுகளின் வழியில்தான் சிந்திக்கிறார்கள் செயல்படுகிறார்கள் என்பது மட்டும் தெளிவாகிறது

ஆர்.எஸ்.எஸ் என்ற பிற்போக்கான வகுப்புவாத இயக்கம் இந்துராஷ்டிராவை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. இதைப் பற்றி அதனை நிறுவிய ஹெட்கேவார், கோல்வாக்கர், சாவர்க்கர் என அனைவரும் பேசி இருக்கிறார்கள். அவர்களுக்கு பின்னால் தீன் தயாள் உபாத்தியாயா பா.ஜ.க விற்கு முன்னோடியான பாரதீய ஜன சங்கத்தை தொடங்கியவர். அவர் ஒருங்கிணைந்த மனித நேயம் (Integrel Humanism) என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அந்த புத்தகத்தில் அவர் குறிப்பிடுவது "நமது நோக்கம் தூய வடிவிலான வர்ணாசிரம தர்மத்தை மீண்டும் புதுப்பித்து நிலைநாட்டுவது தான்" என எழுதியவர்தான் என்றால் இந்த கொள்கைகளை எல்லாம் அவர்கள் கைவிட்டு விட்டார்களா என்ன?

அவர்களது குருஜி என்று போற்றப்படும் கோல்வாக்கர் சாதி முறை அறிவியல் பூர்வமானது என்றார் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வந்தபோது ஆர்எஸ்எஸ் ஆர்கனைசர் பத்திரிகையில் "இதில் பாரதியம் என்று எதுவும் இல்லை, நமக்காக மனுதர்மம் இருக்கும்போது அதை அங்கீகரிக்காமல் இப்படி ஒரு அரசியல் சட்டமா? என்று வினா தொடுத்தது!

அம்பேத்கர் பெண்களுக்கு சொத்துரிமை அளிக்கும் வண்ணம் கொண்டு வந்த இந்து திருத்தச் சட்டத்தையும் மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் இப்போது நாடாளுமன்ற,சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 % இட ஒதுக்கீட்டை தாங்கள் தான் கொண்டு வந்தோம் என்று அமலுக்கு வராத அதையே தங்களின் வெற்றியாக கொண்டாடிக் கொண்டிருப்பவர்களை என்ன சொல்வது?

இந்தியாவிலேயே முதல்முறையாக இட ஒதுக்கீட்டுக்கு எதிராக கலவரம் நடந்த இடம் குஜராத். 1981ல் நரேந்திர மோடி ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகராக இருக்கும் போது தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கு எதிராக மிகப் பெரிய கலகம் நடைபெற்றது. அப்போது ஆர் எஸ் எஸ் சின் அறிக்கை கற்றறிந்த சான்றோர்களை கொண்டு இந்த தலித்களுக்கும், பழங்குடிகளுக்கும் இட ஒதுக்கீடு தொடர வேண்டுமா? என்பது குறித்து நடுநிலையான தீர்ப்பு கூற வேண்டும் என்றது.

1985ல் மேலும் அது இட ஒதுக்கீடு இனிமேலும் நீடிக்க முடியாது, அது கேலிக்கூத்தாகிவிட்டது, இதை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்றது.

கடந்த 2006 இல் யுபிஏ அரசு ஐஐடி, ஐஐஎம்களில் மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி 27% இட ஒதுக்கீடு என்பதை கொண்டு வந்தது. அப்போது "ஆரம்பக் கல்வி மட்டும்தான் உரிமையாக இருக்க வேண்டும், என்றும் அதற்கு மேல் படிப்பது என்றால் அவரவர் தகுதியிலிருந்துதான் வரவேண்டும். இந்த நாட்டினுடைய சிறந்த கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம் களை நாசமாக்குவதற்கு யுபிஏ அரசு இறங்கியுள்ளது என்று தனது ஆர்கசைர் இதழில் எழுதியது. இதுதான் அவர்களது ஒரிஜினல் டிஎன்ஏ!

2019ம் ஆண்டு கன்னோஜியில் பேசும் போது பிரதமர் மோடி தம்மை ஒரு இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என பிரகடனப்படுத்தினார். ஆனால் நாட்டில் ஒரு மெய்யான சமூக நீதியை நிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது அவசியம் என்று பலரும் பேசி வரும் இந்நேரத்தில் அது மக்களை பிளவுபடுத்தும் என்று சாத்தான் வேதம் ஓதுவதைப்போல கருத்து தெரிவித்திருக்கிறார் சாட்சாத் மோடி!

### மோடியின் ஜாதி, ஓபிசி பட்டியலில்தான் இருக்கிறதா?

நாட்டின் பிரதமர் நரேந்திர மோடியின் ஜாதி மோத் காஞ்சி என்பதாகும் இது 1990 வரை குஜராத்தின் முற்பட்ட ஜாதியாகத் தான் இருந்தது. இந்த சமூகம், சமூக ரீதியாகவோ, கல்வி ரீதியாகவோ பிற்படுத்தப்பட்ட ஜாதிய பிரிவுகளில் வருவது இல்லை. அப்படியான நிலையில் நரேந்திர மோடி எப்படி ஓபிசி பிரிவில் தம்மை இணைத்துக் கொள்ள முடியும்? சுத்த சைவ உணவு பழக்கத்தை கொண்ட ஓர் வணிக சாதி எப்படி ஓபிசி பட்டியலில் சேர்ந்தது?

இது தொடர்பாக ஏதேனும் சமூக அல்லது பொருளாதார ஆய்வு செய்யப்பட்டதா? அப்படி செய்திருந்தால் அந்த அறிக்கையை வெளியிட வேண்டும் எனக் கோருவது அவரது பட்ட மேற்படிப்பு சான்றிதழ் போன்று நீளும் பொய்யாக மாறும்!

சந்திரகுப்த மௌரியருக்கு கௌடில்யர் போன்றது. மோடிக்கு ஆர்.எஸ்.எஸ்! சந்திரகுப்தன் ஒரு சூத்திர பெண்ணான முராவின் மகன். ஆனால் கௌடில்யரின் செல்வாக்கு காரணமாக அவன் சாதி அமைப்பை நிறுவனமயமாக்குவதை உறுதி செய்தான் என்பதுதான் வரலாறு. அப்படித்தான் மோடியும் பயன்படுத்தப்படுகிறார். இது ஆர்எஸ்எஸ் இன் மனுவாத இந்து ராஷ்ட்டிரத்திற்கு உதவும் என்பது அவர்களது தீர்க்கமான எண்ணம் எனவேதான் இன்று அவர்கள் சமூகநீதி குறித்து சரமாரியாக பேசி வருகிறார்கள். உண்மையில் அதை அமல்படுத்த அவர்கள் எப்போதும் தயாராக இருந்ததில்லை. அப்படி அமல்படுத்த அவர்கள் தயார் என்றால் தனியார் துறையில் இடஒதுக்கீட்டை கொண்டு வருவார்களா?

இப்போது அவர்கள் பேசுவது தேர்தல் கால வாக்குகளை குறிவைத்துதானே தவிற வேறொன்றுமில்லை! ஆக அவர்கள் சமநீதி, சமூக நீதிக்கு சவக்குழியை தோண்டுவது மட்டும் இன்றும் தொடர்கிறது

தொடர்புக்கு 9444481703

# ரயில் விபத்துக்களை தடுக்க நாதி இல்லையா? மக்களின் உயிர்கள் துச்சமானதா?



ந.சேகரன்

**கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும் பீகார், ஆந்திராவில் என 2 ரயில் விபத்துக்கள். அதற்கு முன் ஜீன் மாதத்தில் ஒரிசாவில் ஒரு பெரும் ரயில் விபத்து. ஆக கடந்த 5 மாதங்களில் மட்டும் 3 ரயில் விபத்துக்கள் கொடூரமாக நடந்தேறியுள்ளன.**

இதில் 300 க்கும் மேற்பட்ட ரயில் பயணிகளின் உயிர்கள் அநியாயமாக காவு வாங்கப்பட்டுள்ளன, 1200 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இவை மட்டுமல்ல இன்னும் பல ரயில் விபத்துகள் தொடர்ச்சியாக நடைபெற்ற இந்த பெரும் ரயில்விபத்துக்களை தடுத்திருக்க முடியுமா? நிச்சயமாக முடியும். முடியாமல் போனதற்கு பாஜக அரசின் அலட்சிய நிர்வாக சீர்கேடே காரணம். கடந்த ஜீன் 3 ந்தேதி ஒரிசா பாலசோரில் கொடூரமாக நடந்தேறிய பெரும் ரயில் விபத்திற்கு பின் உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அக்டோபர் மாதத்தில் 2 விபத்துக்களும் ஏற்பட்டிருக்காது.

### நாளொன்றுக்கு 2 கோடி பேர் ரயிலில் பயணம்!

உலகிலேயே நான்காவது பெரிய ரயில்வே இந்தியாவுடையது. இந்தியாவில் நாள் ஒன்றுக்கு ரயில்களில் பயணிக்கும் மக்களின் எண்ணிக்கை சராசரியாக 2 கோடியே 23 லட்சம் பேர்கள். இது ஏறத்தாழ ஆஸ்திரேலியா நாட்டின் மக்கள் தொகைக்கு நிகரானதாகும். குறிப்பாக, புறநகர் ரயில்களில் மட்டும், சுமார் 1 கோடியே 12 லட்சம் பேர் பயணிக்கின்றனர்.

### ஒரிசா பாலசோர் ரயில்விபத்து!

ஜூன் 2 2023 வெள்ளிக்கிழமை மாலை 7 மணி அளவில் ஒடிசா மாநிலம் பாலாசோரில் உள்ள பஹாநாகா பஸார் ரயில் நிலையத்தை நோக்கி. விரைந்து வந்துகொண்டிருந்த ஷாலிமர் சென்னை கோரமண்டல் விரைவு ரயில் அதன் பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது. அதே நேரத்தில் பெங்களூரு ஹவுரா விரைவு ரயிலும் வந்துகொண்டிருக்க, கோரமண்டல் ரயிலில் இருந்து தடம் புரண்ட பெட்டிகள் மீது ஹவுரா விரைவு ரயில் மோத நாட்டையே உலுக்கிய கோரவிபத்து நடந்தது. இந்த விபத்தில் 289க்கும் மேற்பட்டோர் பலியாகினர்., 1000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### அக்டோபரில் 2 ரயில் விபத்துகள்!

பீகார் ரயில் விபத்து அக்,2023 பீகார் மாநிலத்தின் பக்ஸார் மாவட்டத்தில் உள்ள ரகுநாத்பூர் ரயில் நிலையம் தில்லியின் அனந்த விகார் முனையத்திலிருந்து அஸ்ஸாமின் காமாக்யா நோக்கிச் சென்றது வடகிழக்கு விரைவு ரயில். இது அக்டோபர் 11 ந்தேதி இரவு 9.35 மணி அளவில் 21 ரயில் பெட்டிகள் தடம் புரண்டன. விபத்து நடந்த இடத்தில் 4 பேர் பரிதாபமாக பலியாகினார். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்

### ஆந்திரா ரயில் விபத்து!

அக்டோபர் 2023ஆந்திர மாநிலம் விஜயநகரம் மாவட்டத்தில் கண்டகாபள்ளி ரயில் நிலையத்திற்கு அடுத்த ரயில் கேபிளில் பழுது ஏற்பட்டுள்ளது. இந்தப் பழுதை சரி செய்வதற்காக அந்த வழியாக வந்த விசாகப்பட்டினம் பாலசா பயணிகள் ரயில் இரவு 7.10 மணி அளவில் நிறுத்தப்பட்டுள்ளது. ரயில்வே பணியாளர்கள் பழுதை நீக்கிக் கொண்டிருந்த போது அதே பாதையில் வேகமாக வந்த விசாகப்பட்டினம் ராயகடா விரைவு ரயில் பயணிகள் ரயில் மீது மோதியது. இந்த விபத்தில் மொத்தம் மூன்று பெட்டிகள் தடம் புரண்டன. ஒரு பெட்டியின் பாதி வரை முழுமையாக நசுங்கி சேதமடைந்தது. இந்த விபத்தில் 19 பேர் பலியாகினர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

கொடூரமான இந்தவிபத்துகள், சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியது. ஏற்கனேவே மோடியின்அரசு நிர்வாக சீர்கேட்டினால், அலட்சியத்தால் பல விபத்துகள் நடந்துள்ளன.

மே 26, 2014 அன்று உத்தரப்பிரதேசத்தில் சந்த் கபீர் நகரில், கோரக்பூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கோரக்தாம் எக்ஸ்பிரஸ் ரயில், நின்றுகொண்டிருந்த சரக்கு ரயிலின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 25 க்கும் மேற்பட்ட பயணிகள் உயிரிழந்தனர், 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

மார்ச் 20, 2015, அன்று டேராடுனிலிருந்து, வாரணாசி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஜனதா எக்ஸ்பிரஸ் ரயில், உத்தரப்பிரதேசத்திலுள்ள பச்ரவான் ரயில் நிலையத்துக்கு அருகில் விபத்துக்குள்ளானது. இன்ஜின், அதற்குப் பின்னால் இணைக்கப்பட்டிருந்த இரண்டு பெட்டிகள் தடம் புரண்டதில் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நவம்பர் 20, 2016 அன்று இந்தூர் பாட்னா எக்ஸ்பிரஸ் கான்பூருக்கு அருகே தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இந்தக் கோர விபத்தில் 150க்கும் மேலான பயணிகள் உயிரிழந்தனர். 150க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர்.

ஆகஸ்ட் 19, 2017, ஹரித்துவாரிலிருந்து பூரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கலிங்க உட்கல் எக்ஸ்பிரஸ், உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் முசாபர் நகர் பகுதிக்கு அருகில் விபத்துக்குள்ளானது. ரயிலின் 14 பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்.

இப்படியான தொடர் ரயில் விபத்துக்களால், மக்கள் மத்தியில்எழுந்த கேள்விகள் இரண்டு..

1) ரயில் விபத்தை தவிர்க்கும் தொழில் நுட்பமான கவாச் எங்கே ?

2) இனியாவது இது போன்ற விபத்துக்கள் தடுக்க கவாச் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுமா?

### விபத்து தடுக்கவல்ல "கவாச்"!

கவாச் என்பதுரயில் விபத்தைத் தடுக்கக்கூடிய மேம்படுத்தப்பட்ட ஒரு பாதுகாப்பு தொழில்நுட்பம் ஆகும். மம்தா பானர்ஜி (2011 2012) ரயில்வே துறை அமைச்சராக இருந்தபோது ரயில் மோதல் தவிர்ப்பு செயலாக்கம் (Train Collision Avoidance System) என்ற தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு 2017 இல் ரிசர்ச் டிசைன்ஸ் மற்றும் ஸ்டாண்டர்ட்ஸ் ஆர்கனைசேஷன் (RDSO) மூலம் உருவாக்கப்பட்ட தானியங்கி பாதுகாப்பு தொழில்நுட்பம்தான் கவாச் என்பது.

### கவாச் சின் சிறப்பு அம்சங்கள்!

கவாச், லோகோமோட்டிவ் பைலட்டுகள் என்றழைக்கப்படும் ரயில் ஓட்டுநர்களுக்கு விபத்து குறித்து எச்சரிக்கை செய்யும் விதமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டு ரயில்கள் ஒரு பாதையில் வரும்போதும் அல்லது எதிர் எதிர் திசையில் வரும்போதும், சிக்னல் பாஸிங் அட் டேஞ்சர் (SPAT) எனும் சமிக்ஞையை ஏற்படுத்தி ரயில் ஓட்டுநர்களை எச்சரிக்கும். அதன் மூலம் ரயிலின் வேகம் குறைக்கப்பட்டு ரயிலை விபத்திலிருந்து தவிர்க்க இந்த கவாச் உதவுகிறது.

இதைவிடவும் முக்கிய அம்சம் என்னவென்றால், ஒருவேளை எச்சரிக்கை விடப்பட்டும் கவனக்குறைவாக ரயில் ஓட்டுநர்கள் வேகத்தைக் குறைக்கத் தவறும் பட்சத்தில், இது தானாகவே பிரேக் அப்ளை செய்து 400 மீட்டர் தொலைவுக்கு முன்னாலே ரயிலை நிறுத்தி விடும். பனி மூட்டம் அதிகமாக இருக்கும் சூழலில் கூட எதிரே ரயில் வந்தால் கூட முன்கூட்டியே இது எச்சரிக்கும். கவாச் பயன்பாடு இருக்கும் பட்சத்தில் விபத்து நிகழ வாய்ப்பில்லை .

### கவாச் சின் தற்போதைய பயன்பாடு

இந்தியாவில் மொத்த ரயில் பாதையின் நீளம் 68000 கி.மீ. தற்போதைய நிலவரப்படி, 1455 கிமீ தொலைவுக்குத் தான் கவாச் பயன்பாடு உள்ளது. அதாவது மொத்த பாதையில் 2 சதம்தான் விபத்து நிகழா வண்ணம் கவாச் பயன்பாடு உள்ளது. அதுவும் தென் மத்திய ரயில்வே பகுதயில் 1200 கிமீ உள்ளது. இன்னும் 98 சதத்திற்கான கவாச் பொருத்துதல் பணி அதாவது 66545 கி.மீ.ரயில்பாதைக்கு கவாச் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.

ஆனால் நடப்பு 202324 ஆண்டிற்கு ஒன்றிய அரசு கவாச் பொருத்துதல் பணிக்கு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.1500 கோடி மட்டுமே. இதன்மூலம் சொற்பமான 2500 கி.மீ. ரெயில் பாதைக்குத்தான் கவாச் பொருத்தப்படும் வாய்ப்புள்ளது. மோடி அரசின் அலட்சியம் புரிகிறதா?

கவாச்சிற்கு மத்தியஅரசு ஒதுக்குவதோ ரூ1500 கோடி மட்டுமே. ஆனால் அதானிக்கு மட்டும் ஒரு தவணையில் 21000 கோடி கடன் வழங்கிறது மோடி அரசு. கடந்த ஆண்டில் மட்டும்பெரும் கார்ப்பரேட்டுகளின்வேண்டுமென்ற திரும்பச் செலுத்தப்படாத 2.09 லட்சம் கோடி வராக் கடன் களை தள்ளுபடி செய்துள்ளது மோடி அரசு.

விபத்துக்களை தடுக்கும் கவாச் நிறுவுவதில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு வந்தே பாரத் என்றும் புல்லட் ரயில் என்றும் வீண் ஜம்பம் செய்து வருகிறது பாஜக அரசு. வந்தேபாரத் ரயில் ஆரம்பித்த ஒரு வாரத்தில் ரயில்பாதையில் மாடுகள் முட்டி வந்தேபாரத் சேதமானதைக் கண்டோம். கொடுமை என்னவெனில் தற்போது இயக்கப்படும் வந்தே பாரத் ரயில்களில் 98 சதத்திற்கு கவாச் பயன்பாடு இல்லை என்பதே.

ஒன்றிய அரசுக்கு சொந்தமான பெரம்பூரில் உள்ள ஐ.சி.எப். தொழிற்சாலை யிலேயே வந்தே பாரத் ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்ய மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் தனியாருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஐ.சி.எப். தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு பதில் தனியாருக்கு தாரை வார்க்கிறது ஒன்றிய அரசு. இதனை எதிர்த்து கடும் போராட்டம் நடந்து வருகிறது. நோக்கம் விபத்துகளை தடுப்பது அல்ல. தனியாருக்கு தாரை வார்ப்பது.







### லட்சக்கணக்கில் ரயில்வே பணியாளர் காலியிடங்கள்!

விபத்துக்கள் நடப்பதற்கு முக்கிய காரணியாக இருக்கும் ரயில்வே சிக்னல் போக்குவரத்து கட்டுப்பாடு பிரிவுகளில் 77000 பணியிடங்கள் நிரப்படாமல் காலியாக உள்ளன.மொத்தம் 3.12 லட்சம் ரயில்வே பணியாளர் இடங்கள் காலியாக உள்ளன. கூடுதல் பணிச் சுமைக்கு சிக்னல் பணியாளர்களும் ரயில் ஓட்டுநர்களும் உள்ளாகின்றனர். போதிய ஒய்வு அளிக்கப்படாத காரணத்தினால். உளவியல் பிரச்சினைகளால் இந்த ஊழியர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகின்றன்.

நிதிப் பற்றாக்குறை என காரணம் காட்டி,காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்ய மனமில்லை. இதனால் அநியாயமாக மக்கள் உயிர்களை காவு வாங்கும் விபத்துக்களை தடுக்க பாஜக அரசு சற்றும் அக்கறை காட்டவில்லை என்பதே நிசர்ன உண்மை.

மக்கள் உயிர்களை ரயிலில் பயணிக்கும் மக்களின் விலைமதிப்பற்ற உயிர்களை துச்சமென கருதும் மோடி அரசுக்கு வரும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் முற்றுப்புள்ளி வைப்பதே சரியான தீர்வாகும்.

தொடர்புக்கு: 9443120051



வ.மணிமாறன்

# வாரத்துக்கு 70 மணி
# இந்தியா முன்னேற

**இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி, தொழிலாளர்கள் வாரத்துக்கு 70 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று பேசியிருப்பது பெரும் சர்ச்சையாகி உள்ளது. சாமர்த்தியமான வார்த்தைகளில் அவர் பேசியிருந்தாலும் அதில் எஞ்சி நிற்பது லாப வெறி தான் என்பதும், இத்தனை ஆண்டு காலமாக அவர் போட்டிருந்த கருணை சார் முதலாளிய வேடம் கலைந்திருப்பதும் முக்கியமாகும்.**

“இது எனது நாடு. நான் வாரத்திற்கு 70 மணிநேரம் வேலை செய்ய விரும்புகிறேன் என்று இந்தியாவில் உள்ள இளைஞர்கள் சொல்ல வேண்டும்'' என்கிறார் இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி. அவருடைய இந்தப் பேச்சுக்கு இந்திய கார்ப்பரேட் முதலாளிகள் பெரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் வளர்ச்சி, தேசப்பற்று போன்ற இனிப்புகளைத் தடவி போதித்தாலும், அதற்குள் இருப்பது கார்ப்பரேட் முதலாளிகளின் சுரண்டல், லாப வெறி மட்டும் தான். இத்தனை நாட்களாக கருணை சார் (Compassionate) முதலாளித்துவ கருத்துகளைப் பேசிவந்த இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்திக்கு, இனிப்புத் தடவி சாமர்த்தியமாகப் பேச சொல்லித்தர வேண்டுமா? என்ன? அவர் பேசியிருப்பதில் மூன்று முக்கியமான கருத்துகள் குறித்து சற்று ஆழ்ந்த நோக்கலாம்.

முதலாவது, “இளம் தொழிலாளர்கள் வாரத்திற்கு 70 மணி நேரம் உழைக்க வேண்டும்“ என்று நாராயணமூர்த்தி கூறுவது எதன் அடிப்படையில்? அறிவியலுக்கும் ஆரோக்கியத்துக்கும் மருத்துவத்துக்கும் எதிரான ஒன்றை செயல்படுத்த அவர் நினைக்கிறார். மனித குலம் 100 ஆண்டுகளுக்கு முன்பே இப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டு முன்னேறி வந்துள்ளது. முதலாளித்துவ உலகமும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில்தான், சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் (International Labour Standards - ILS) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation - ILO) விதிகளை, செயல் திட்டங்களை வகுத்துள்ளது.

இரண்டாவது, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளின் முன்னேற்றத்துக்கு வேலை நேரம் நீட்டிப்பு தான் காரணம் என்று நாராயணமூர்த்தி கூறியிருப்பது தவறானதாகும். அவர் கூறும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்வந்த காலத்தில், ஜெர்மனி, ஜப்பான் நாடுகளில் அதிக அளவாக 9 மணி நேரத்திற்குத் தான் வேலைநேரம் மாற்றப்பட்டது என்பது வரலாறு.

மூன்றாவது, உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கு வாரத்திற்கு 70 மணி நேரம் உழைக்க வேண்டும் என்று நாராயணமூர்த்தி கூறுகிறார். இப்படி வேலை நேரத்தை அதிகரிப்பதால் உற்பத்தித்திறன் அதிகரித்து விடாது. புதிய கண்டுபிடிப்புகளும் திறன்பெற்ற தொழிலாளர்களும் இருந்தால்தான் உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.

‘புதிய கண்டுபிடிப்பு’களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் மிகக் குறைந்த அளவே முதலீடு செய்கின்றன. ஆனால், உற்பத்தித்திறனை அதிகரிக்கும் சுமையை தொழிலாளர்கள் மீது நாராயணமூர்த்தி தள்ளி விடுகிறார். கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சியை நாட்டின் முன்னேற்றம், தேசத்தின் வளர்ச்சி என்றும் அவர் முலாம் பூசுகிறார்.

## வேலை நேரம் எவ்வளவு?

தொழிலாளர்கள் வாரத்திற்கு 70 மணி நேரம் உழைக்க வேண்டும் என்றால், ஒரு நாளைக்கு சராசரியாக 12 மணி நேரம் உழைக்க வேண்டும். இதைத்தான் இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி



கூறுகிறார்.

ஒரு தொழிலாளி தன்னுடைய வீட்டிலிருந்து, வேலை செய்யும் இடத்துக்கு சென்று வர – போக்குவரத்து நெரிசல், பேருந்து வசதி போன்றவற்றைக் கணக்கிட்டால் – குறைந்தது 3 மணி நேரம் தேவைப்படும். சராசரியாக ஒரு நபர் ஒரு நாளைக்கு 7 மணி நேரமாவது தூங்க வேண்டும். எஞ்சியிருப்பது இரண்டு மணி நேரம்தான். அதாவது ஒரு நாளைக்கு 12 மணி நேரம் உழைக்கும் தொழிலாளியின் ஓய்வுக்கு இந்த இரண்டு மணி நேரம்தான் கிடைக்கும். இந்த நேரத்தில் அந்தத் தொழிலாளி என்ன செய்ய முடியும்? இந்த இரண்டு மணி நேரத்தில் குடும்பத்தை கவனிப்பது, குழந்தைகளை கொஞ்சுவது, உறவினர்கள், நண்பர்களுடன் உறவாடுவது, படிப்பது சிந்திப்பது போன்றவற்றில் எதை செய்வது?

எந்திரம் போன்று இயங்கக்கூடிய, திறன்மிக்க தொழிலாளர்கள் வேண்டும் என விரும்புகிறீர்கள். அது சாத்தியமில்லை நாராயணமூர்த்தி அவர்களே. ரத்தமும் சதையுமான மனிதனுக்கு போதுமான ஓய்வும் உறக்கமும் சமூக உறவாடலும் அவசியம். தன்னைப் பற்றி, சமூகத்தைப் பற்றி, தொழில்நுட்பம் பற்றி, அதன் தேவைகள் பற்றி சிந்திப்பதற்கு தொழிலாளிக்கு நேரம் வேண்டும். அப்பொழுதுதான் உற்பத்தித் திறன் அதிகரிக்கும். சிந்திக்கவே நேரம் கொடுக்காமல் உழைக்க வேண்டும் என்கிறீர்கள். அப்படி கடினமாக உழைக்கும் தொழிலாளியின் உடல், மன நலன் என்ன ஆகும்? நாட்டிலுள்ள அத்தனை நோய்களும் அந்தத் தொழிலாளியை தேடி வராதா?

இந்தியாவில் வேலையின்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. படித்த இளைஞர் கூட்டம் தகுந்த வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், 12 மணி நேர வேலை நடைமுறைக்கு வந்தால், வேலையின்மை மேலும் அதிகரிக்கும். படித்துவிட்டு வேலை தேடும் இளைஞர்கள் அதிகமாக இருக்கிறார்களே என்பதற்காக, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க முதலீடு போடாமலும், தொழில் நிறுவனங்களை தொடங்காமலும் இருப்பது ஏன்?

## வேலை நேரம் குறைகிறதா? அதிகரிக்கிறதா?

இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி கூறியிருப்பதற்கு நேர் மாறாகவே முன்னேறிய நாடுகளின் அனுபவங்கள் உள்ளன. கடந்த 150 ஆண்டுகளில் முன்னேறிய நாடுகளின் தொழிலாளர்கள் வேலை செய்யும் நேரம் குறைந்து கொண்டே வருகிறது.

ஜெர்மன் நாட்டில், தொழிலாளர்களின் வாராந்திர உழைப்பு நேரம் ஏறத்தாழ 59 விழுக்காடு குறைந்துள்ளது. அதாவது, 1870 ஆம் ஆண்டு வாரத்திற்கு 68 மணி நேரமாக இருந்த தொழிலாளர்களின் உழைப்பு நேரம், 2017ல் 28 மணி நேரமாக குறைந்துள்ளது.

ஜப்பான் நாட்டில் 1961 ஆம் ஆண்டு வாரத்துக்கு 44 மணி நேரமாக இருந்த உழைப்பு நேரம், தற்போது வாரத்துக்கு 35 மணி நேரமாக குறைந்துள்ளது.

19ஆம் நூற்றாண்டிலேயே அதிக நேரம் வேலை செய்வது தொழிலாளர்களின் ஆரோக்கியத்திற்கும், அவர்களின் குடும்பத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும்; உற்பத்தித் திறன் பாதிக்கும் என்பது அறிவியல் ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐஎல்ஓ) முதல் மாநாடு இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. வரையறுக்கப்பட்ட வேலை நேரமும்; ஓய்வு எடுப்பதற்கு போதுமான கால அவகாசமும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன்றைக்கு, வரையறுக்கப்பட்ட வேலை நேரம்; தினசரியும் வாராந்திரமும் ஓய்வெடுப்பதற்கான காலம்; ஆண்டுக்கு தரப்பட வேண்டிய விடுமுறைகள் என பின்பற்ற வேண்டிய தரநிலைகளை (Standards) சர்வதேச தொழிலாளர் அமைப்பு அறிவித்துள்ளது. இவை உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் தொழிலாளர்களின் உடல், மன ஆரோக்கியத்தை பாதுகாக்க கூடியது என்றும் ஐஎல்ஓ உறுதிபடக் கூறுகிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, அதன் எதிர்கால வளர்ச்சிக்கு மிக முக்கியமான சொத்து இளைஞர்கள் தான். இந்தியாவில் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான இந்த இளம்தொழிலாளர்கள், வாரத்திற்கு 70 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று கூறுவது அவர்களின் ஆற்றலை அழிக்கும் செயலன்றி வேறல்ல.

இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களின், அதன் தலைவர்களின் உள்ளார்ந்த விருப்பத்தையே, இன்ஃபோசிஸ் நாராயண மூர்த்தியின் பேச்சு வெளிப்படுத்தி இருக்கிறது. ஒரு நாட்டினுடைய உற்பத்தித்திறனின் அளவு, அந்த நாட்டின் புதுப்புனைவுகளை உருவாக்கும் அமைப்பின் (Innovation System) பலத்தை பொறுத்தது என்பது கார்ப்பரேட் முதலாளிகளுக்கு தெரியாதா, என்ன?

## ஆராய்ச்சியில் தனியார் பங்கு

ஒன்றிய அரசின் நிதி ஆயோக், புதுப்புனைவுகளின் குறியீடு – 2021 (India Innovation Index) வெளியிட்டுள்ளது. இந்தியாவின் எதார்த்தம் எப்படி இருக்கிறது என்பதை அந்த அறிக்கை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.


புதுப்புனைவுகள், கண்டுபிடிப்புகள் என்பது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) பணிகளால் வரக்கூடியது. நாட்டினுடைய மொத்த உற்பத்தியான – ஜிடிபியிலிருந்து ஆராய்ச்சிக்காக எவ்வளவு செலவிடப்படுகிறது என்பது கணக்கிடப்படும். இதனை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மொத்த செலவு (Gross domestic expenditure on R&D - GERD) என்று குறிப்பிடுவர்.

இந்தியாவில் 2018 ஆம் ஆண்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மொத்தச் செலவு 0.65 விழுக்காடாக இருந்தது. இது உலகிலேயே மிகக் குறைவான தொகையாகும். இந்தத் இந்தத் தொகையும் கூட 2020 –21 ஆம் ஆண்டில் 0.64 விழுக்காடாக குறைந்துவிட்டது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R



# நேரம் வேலை அவசியமா?



& D) பணிகளுக்காக இந்தியாவில் செலவிடப்படும் நிதியில், 2020–21 ஆம் ஆண்டு தனியார் துறையின் பங்கு 41 விழுக்காடு ஆகும். இதுவே 2012–13 ஆம் ஆண்டு 45 விழுக்காடாக இருந்தது. ஆராய்ச்சிக்காக தனியார் துறை செலவிடும் நிதி குறைந்து வருவதையே வெளிப்படுத்துகிறது.

இந்தியாவுடன் ஒப்பிடும்போது, வலுவான ஆராய்ச்சி அமைப்புகளை கொண்ட நாடுகளில் தனியார் துறைகள் ஆராய்ச்சிக்காக அதிகமான நிதியை செலவிடுகின்றன. பல்வேறு நாடுகளில் ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்ட நிதியில் தனியார் துறையின் பங்கு குறித்த 2020 ஆம் ஆண்டு விவரம் வருமாறு:

- ஜப்பான் – 79%
- கொரியா – 79%
- சீனா – 77%
- அமெரிக்கா – 75%
- ஜெர்மனி – 67%
- இங்கிலாந்து – 67%
- இந்தியா – 41%

ஆராய்ச்சிக்காக செலவிடாமல்; ஆய்வுகளை மேற்கொள்ளாமல் புதிய கண்டுபிடிப்புகள், புதுப்புனைவுகள் வெளிவராது. புதிய கண்டுபிடிப்புகள் வெளிவராமல் உற்பத்தித் திறன் அதிகரிக்காது.

இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களின் குறைந்த உற்பத்தித்திறன் காரணமாக உலகச் சந்தையில் போட்டியிடும் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இளம் தொழிலாளர்கள் வாரத்திற்கு 70 மணி நேரம் பணியாற்றினால் இந்த பிரச்சனை தீர்ந்து உற்பத்தித் திறன் உயர்ந்துவிடும் என்று கார்ப்பரேட் முதலாளிகள் எப்படி கூறுகின்றனர்? இளம்தொழிலாளர்கள் மீது இந்தச் சுமையை தள்ளிவிடுவது சரியானதா?

**சர்வதேச தொழிலாளர் தரநிலை**

ஐ.நா. சபையின் ஒரு அங்கம் தான் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ). 187 நாடுகளின் அரசுகள், முதலாளிகள், தொழிற்சங்கங்கள் உறுப்பினர்களாக இருக்கும் முத்தரப்பு அமைப்பு இது. சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் (Labour Standards) மற்றும் கொள்கைகளை உருவாக்குவது, அனைத்து பெண்களும் ஆண்களும் கண்ணியமான வேலைகளைப் பெறுவதற்கான திட்டங்களை வகுப்பது இதன் பணியாகும்.

நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒப்பந்தங்களின் போது ஐஎல்ஓ வகுத்துள்ள சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் (ILS) பின்பற்றப்படுகிறதா என்பதும் நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கும்.





வாரத்திற்கு 70 மணி நேரம் வேலை என இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி முன்மொழிந்திருப்பதும் இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் அதனை ஆதரித்திருப்பதும் சர்வதேச தொழிலாளர் தரநிலைக்கு எதிரானதாகும். 1919ல் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் முதல் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறானதாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டனுடன் இந்தியா நடத்தி வரும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கான (FTA) பேச்சுவார்த்தையில், சர்வதேச தொழிலாளர் தரநிலைகளும் (ILS) இடம்பெற்றுள்ளன. இந்தப் பேச்சுவார்த்தை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில், சர்வதேச தொழிலாளர் தரநிலைகளைப் பின்பற்றுவது குறித்த ஒரு அத்தியாயமும் உள்ளது.

அமெரிக்கா தலைமையிலான இந்தோ பசிபிக் பொருளாதார கூட்டமைப்பில் (ஐபிஇஃப்) இந்தியாவும் உறுப்பினராக உள்ளது. இந்த கூட்டமைப்பு நாடுகளுடன் இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் வணிகம் செய்வதற்கு ஐஎல்ஓ வகுத்துள்ள சர்வதேச தொழிலாளர் தரநிலைகளை (ஐ.எல்.எஸ்) பின்பற்றுவது அவசியமாகும்.

இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் தொழிலாளர் உரிமைகளை மதிக்காவிட்டால், அவற்றின் வணிக வாய்ப்புகளும் வளர்ச்சியும் பாதிக்கும். இதனால் தான் கார்ப்பரேட் நிறுவனங்களின் லாப வெறியை மறைப்பதற்காக இந்திய நலன், தேசத்தின் வளர்ச்சி என்ற பெயரில் இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி முலாம் பூசுகிறார்.

இதுவரை 'கருணை சார்' (Compassionate) முதலாளிய வேடமிட்டிருந்த நாராயண மூர்த்தியின் சுரண்டல், லாப வெறி மீண்டும் அம்பலமாகி இருக்கிறது.

இன்போசிஸ் நிறுவனத்தை வளர்ப்பதற்காக கருணை சார் முதலாளிய வேடமிட்ட நாராயணமூர்த்தி, தொழில் நிறுவனத்தில் ஊழியர்களும் பங்குதாரர்கள் (ESOP) என்று கூறி நிரந்தர சுரண்டல் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். இதன் மூலம் ஊழியர்களின் நிறுவனத் தேர்வு சுதந்திரத்தை முடக்கினார்.

இன்று இன்ஃபோசிஸ் உலகளாவிய நிறுவனமாகி விட்டதால், ஊழியர்கள் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் பணியாற்ற வேண்டும் என்கிறார். சாமர்த்தியமான வார்த்தைகளின் மூலம் லாப வெறியை, சுரண்டல் நலனை நாராயண மூர்த்தியும் கார்ப்பரேட் முதலாளிகளும் மூடி மறைக்க முயல்கின்றனர். அது சாத்தியமில்லை என்பதை இளம் தொழிலாளர்கள் உணர்த்துவர்.

தொடர்புக்கு: 9500001224



# மாற்றுத் திறனாளிகள் தகவல் பயன்பாட்டைப் பெறுவதை உறுதி செய்க

**பினாய் விஸ்வம் எம்.பி. கடிதம்**

ஒன்றிய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக்குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி எழுதிய கடிதம் வருமாறு:

தீவிரமாகப் பரிசீலிக்கத் தக்கதும், மாற்றுத் திறனாளிச் சமூகம் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதைத் தடை செய்து தாமதிப்பதுமான ஒரு விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

உலகின் பார்வைத் திறனற்றோரில் ஆகப் பெரும் எண்ணிக்கையிலான மக்களையும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் செவித் திறன் பாதிப்பு உடைய மக்களையும் இந்தியநாடு கொண்டுள்ளது.



இவ்விரண்டு குழுக்களுடனும் பிற வகை ஊனம் உடையோரும் சினிமா திரையரங்குகள் மற்றும் பிற பொழுது போக்கு இடங்களின் வசதிகளை அணுகிப் பெறுவதை மறுக்கப்படுகிறார்கள். மாற்றுத் திறனாளிகள் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை அணுகிப் பெற உறுதி செய்யுமாறு 2016 உடல் ஊனமுற்றோர் சட்டத்தின்படி அரசுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தும், இந்த உரிமை மறுக்கப்படுகிறது.

பார்வைத்திறனற்றோர் புரிந்துகொள்ளும்வகையில் வீடியோ/சினிமா பின்னணி காட்சிகளின் 'விவரங்களை விவரித்தல்' (ஆடியோ டிஸ்கிரிப்ஷன்ஸ்) வசதி, செவித்திறன் குறைபாடுள்ளோர் புரிந்து கொள்ளும் வகையில் கதாபாத்திரங்கள் உரையாடலைத் 'துணை தலைப்பு' களாகவும் (க்ளோஸ்டு கேப்ஷன்ஸ்) மற்றும் செய்திகள் ஒலிபரப்பில் உள்படமாகச் சைகை மொழியில் விவரிக்கும் வசதி, ஊனமுற்றோருக்கு வசதியாகச் சாய்வுத் தளத்துடன் கூடிய பொது அரங்குகள் மற்றும் அது போன்ற வசதிகளுக்கான நடவடிக்கைகளை எடுத்தல் மாற்றுத் திறனாளி சமூகத்திற்குக் கண்ணியத்தையும் சமத்துவத்தையும் உறுதி செய்வதில் முக்கிய நடவடிக்கைகளாக இருக்கும்.

சினிமா மற்றும் பிற மனமகிழ்ச்சி பொழுது போக்கு நிகழ்ச்சிகளை மாற்றுத் திறனாளி மக்களுக்கு மறுப்பது ஏற்க முடியாதது. மேற்கண்டவற்றைப் பரிசீலித்துத் தங்கள் அமைச்சரகம் சம்பந்தப்பட்டவர்களுடன் உடனே ஆலோசனைகளை மேற்கொண்டு, நமது நாட்டில் பல லட்சக்கணக்கான மாற்றுத் திறனாளி மக்களுக்குச் சினிமா, ஓடிடி பிளாட்பார்ம்ஸ், பிற உள்ளரங்கு பொழுது போக்கு மற்றும் திறந்த வெளி மனமகிழ்ச்சி விளையாட்டு, மலையேற்றம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் வளாகங்களின் வசதிகளைப் பெற உறுதி செய்ய கடுமையான வழிகாட்டல்களை வழங்க வேண்டும் என நான் தங்களை வற்புறுத்துகிறேன் என்று தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

# இந்தியாவின் கடன் ரூ.172.50 லட்சம் கோடியாக உயர்ந்தது

1947 ல் இருந்து 2014 ம் ஆண்டு வரையிலான 67 ஆண்டு காலத்தில் 14 பேர் பிரதமர் பதவியில் அமர்ந்து நாட்டை ஆண்டுள்ளனர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் வாங்கட்டப்பட்ட கடன் ரூ.55 லட்சம் கோடி மட்டுமே. ஆனால், பிஜேபி ஆட்சி நடக்கும் 2014 க்கு பிறகான இந்த ஒன்பதரை ஆண்டில் மட்டும் வாங்கிய கடன் ரூ.117 லட்சம் கோடி.

மோடிக்கு முன்பு பிரதமராக இருந்தவர்கள் 188 பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கினார்கள். அதில் 10ஐ தனியார் மயமாக்கினார்கள். ஆனால் பிரதமர் மோடி இந்த ஒன்பதரை ஆண்டுகளில் ஒரே ஒரு பொதுத்துறை நிறுவனத்தைக்கூட தொடங்கவில்லை. மாறாக பிஜேபி அரசு 23 பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கிவிட்டது. அதோடு நிற்கவில்லை, National Monetisation Pipeline எனும் திட்டத்தை கொண்டு வந்துள்ளனர்.

இந்ததிட்டத்தின் பெயரில் மிச்சம்மீதியிருப்பதையும் தனியாருக்கு கொடுக்க திட்டமிட்டுள்ளனர் .

# அனகாபுத்தூர் மக்களின் வாழ்விட உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

## இரா.முத்தரசன் கோரிக்கை

அனகாபுத்தூர் மக்களின் வாழ்விட உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னர் தாம்பரம் வட்டத்திலும் பிறகு, தமிழ்நாடு அரசு காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு பிரித்து இரண்டு மாவட்டங்களாக அமைத்ததால் ஆலந்தூர் வட்டம் என்று மாற்றப்பட்டு, தற்போது பல்லாவரம் வட்டத்தில் அனகாபுத்தூர் அமைந்துள்ளது. இங்குள்ள புல எண்கள் 136, 171 மற்றும் 181 உள்ளிட்ட பல்வேறு புல எண்களில் உள்ள நிலப்பரப்பில் சுமார் 700க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல பத்தாண்டுகளாக வழிவழியாக கூறை வீடுகள் கட்டி வாழ்ந்து வருகின்றன. இந்த நிலப்பரப்பு 1906 மற்றும் 1938 ஆண்டுகளின் நில அளவைத் துறையின் ஆவணங்களிலும், அதற்கு பின்னிட்ட காலங்களில் நிலஅளவைத் துறை வெளியிட்டுள்ள ஆவணங்கள் படியும் இப்பகுதி குடியிருப்புப் பகுதிகள் என மிகத் தெளிவாக பதிவு செய்து காட்டப்பட்டுள்ளன.

இதன் காரணமாகவே தமிழ்நாடு அரசும், தொடர்புடைய துறைகளும் இப்பகுதியில் வசித்து வரும் குடும்பங்களுக்கு மின் இணைப்பு, குடும்ப அட்டைகள், வாக்காளர் அட்டைகள், ஆதார் அடையாள அட்டைகள் போன்றவைகள் வழங்கியுள்ளன. மேலும் இப்பகுதிகளில் 3 சென்ட் மற்றும் அதற்கும் கூடுதலான நில பரப்பில் குடியிருந்து வருபவர்களுக்கு சொத்துவரி விதித்து, ஆண்டுதோறும் உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அனாகாபுத்தூர் பகுதியில் அமைதியாக வாழ்ந்து வந்த குடும்பங்கள் எப்படி ஆக்கிரமிப்பு குடும்பங்கள் என வகைப்படுத்தப்பட்டன? இந்தப் பகுதியின் நில ஆவணங்களில் உண்மை தன்மை உரிய முறையில் நீதிமன்றங்களின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதா? இது தொடர்பான வழக்குகளில் நில வியாபார நிறுவனங்களின் செல்வாக்கும், அழுத்தமும் இருக்கிறதா? அவ்வப்போது அரசின் நகராட்சி துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் ஆவணங்களை முறையாக கையாண்டும், பராமரித்தும் வந்துள்ளனரா? என்ற பல கேள்விகள் எழுகின்றன என்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாடு அரசின் கவனத்துக்கு சுட்டிக் காட்டுவதுடன் அனகாபுத்தூர் பகுதி மக்களின் வாழ்விட உரிமையை பாதுகாக்கும் முறையில் கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அனகாபுத்தூர் பகுதியில் வசித்து வரும் குடும்பங்கள் அனைத்துக்கும் மனைப்பட்டா வழங்க வேண்டும். அண்மையில் ஆக்கிரமிப்பு அகற்றுதல் என்ற பெயரில் இடிக்கப்பட்ட வீடுகள் முழுமையாக அரசு செலவில் கட்டித் தரப்பட வேண்டும்.

நீதிமன்ற தீர்ப்புகள் நிர்பந்திக்கும் எனில் உரிய முறையில் மேல் முறையீடு செய்து, பல பத்தாண்டுகளாக வாழ்ந்து வரும் குடும்பங்களின் வாழ்வுரிமை, வசிப்பிட உரிமை நிலைநாட்டப்பட வேண்டும்.

நில ஆவணங்கள் பதிவு மற்றும் வகை மாற்றம் போன்றவைகளை மறு ஆய்வு செய்து, தவறுகள் கண்டறியப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் மீது தமிழ்நாடு அரசின் நகர்புற வளர்ச்சித் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகள் உரிய நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் தக்க உத்தரவு வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம் என இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மு.வீரபாண்டியன் நேரில் சென்று குறைகளை கேட்டறிந்தார்

அனகாபுத்தூர் பகுதியில் நீதிமன்றம் உத்தரவு என்ற பெயரில் அப்பாவி மக்களை மழை காலம் என்று கூட பார்க்காமல் ஆக்கிரமிப்பு என்று கூறி வீடுகளை இடித்து அப்புறப்படுத்துகின்றனர்.

இதனை தடுத்து நிறுத்த வேண்டும் என கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழக முதல்வருக்கு முதல்வரின் உதவியாளர் மூலம் செல்போனில் தொடர்பு கொண்டும், கடிதம் கொடுத்தும் இடிக்கும் இந்த பணியை 10 நாட்களுக்கு தள்ளி வைத்துள்ளார்.

மாநில துணை செயலாளர் மு. வீரபாண்டியன் பாதிக்கப்பட்ட பகுதிக்கு சென்று பார்வையிட்டார்.

அவருடன் மாவட்ட செயலாளர் பா. கார்த்திக், மாவட்ட துணை செயலாளர் பூபாலன், பகுதியை சேர்ந்த பாலன், தாமரை செந்தில்குமார், மதி, பரத், லியான்டர் உட்பட பல தோழர்களும் பங்கேற்றனர்.

# மின் விநியோகம் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாஜக ஒன்றிய அரசு பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்து வருகிறது. குறிப்பாக மின்சாரம், துறைமுகம், விமான நிலையம், பொருள் போக்குவரத்து போன்ற முக்கியத்துறைகளில் அதானி குழும நிறுவனங்களின் அதிகார எல்லைக்கு வேகமாக மாற்றப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 அறிமுகம் செய்யப்பட்டது. நாடு தழுவிய கடுமையான எதிர்ப்பு காரணமாக கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வீடுகளில் உபயோகப்படுத்தும் மின்சாரத்தை அளவீடு செய்ய ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தை அறிவித்து, மாநில அரசுகளை அமலாக்குமாறு நிர்பந்தித்து வருகிறது. ஏற்கனவே மின்சார விநியோகத்தில் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டால் தான் மாநில அரசு இன்றியமையாத் தேவைகளுக்கு கடன் வாங்கும் அளவை அதிகரிக்க முடியும் என நிபந்தனை விதித்தது.

இப்போது ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்பட்டால் அது பொதுமக்களுக்கு பெரும் துயரம் அளிப்பதாக முடியும். இதன் பாதக விளைவுகளை உணர்ந்த கேரளம் உட்பட சில மாநிலங்கள் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை ஏற்க முடியாது என அறிவித்துள்ளன. ஸ்மார்ட் மீட்டர் பொருத்தியுள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் மக்கள் கசப்பான அனுபவம் பெற்றுள்ளனர்.

அண்மையில் அடர்த்தியான மின் பயன்பாட்டு நேரத்திற்கு மிகை கட்டணம் நிர்ணயித்தது எதிர் விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறையினர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் முன் பணம் செலுத்தி (Pre- paid Scheme) மின்சாரம் பயன்படுத்துவது மோசடிக்கும், ஏமாற்றத்துக்கும் வழி வகுக்கும். இது பாஜக ஒன்றிய அரசின் எண்ணியல் வணிக முறை பெரும் குழும நிறுவன ஆதிக்கத்திற்கு மின் நுகர்வோர்களை தள்ளி விடும் பேரபாயம் கொண்டது. மக்கள் நலனுக்கு எதிரான ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை தமிழ்நாடு அரசு ஏற்கக் கூடாது. அதற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

### திராவிடர் கழக மகளிரணி தலைவர்

# க.பார்வதி மறைவிற்கு சிபிஐ இரங்கல்

திராவிடர் கழக மகளிரணி தலைவர் க.பார்வதி மறைவிற்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் கூறியிருப்பதாவது

திராவிடர் கழக மேனாள் மாநிலச் செயலாளர் க.பார்வதி (வயது 77) அவர்கள் 08.11.2023 அன்று மறைவுற்றார்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக பொது வாழ்வில் ஈடுபட்டு திராவிடர் கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர். சிறைச் சென்றவர். பெரியாரின் சுயமரியாதை கருத்துக்களை முன்னெடுத்தவர்.

தன் குடும்பத்திலும், சமூகத்திலும், சாதி மறுப்பு திருமணங்களுக்கு முன்னுரிமை அளித்த கொள்கை பற்றாளர். அவரது மறைவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் ஆழ்ந்த அஞ்சலி செலுத்துவதோடு அவரது குடும்பத்திற்கும், திராவிடர் கழகத் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பாலஸ்தீனம் மீது இனவெறி தாக்குதல் நடத்தும் இஸ்ரேலை கண்டித்து பரப்புரை இயக்கம்

## சிபிஐ, சிபிஐ(எம்), சிபிஐ (எம்.எல்) லிபரசேன் கட்சிகளின் கூட்டறிக்கை

இனவெறி இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது நடத்தி வரும் இனப்படுகொலை தாக்குதலைக் கண்டித்து சிபிஐ,சிபிஐ(எம்), சிபிஐ(எம்.எல்) லிபரேசன் சார்பில் தமிழகம் முழுவதும் 20.11.2023 முதல் கண்டன பரப்புரை இயக்கம் நடத்த வேண்டும் என்று சிபிஐ மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், சிபிஎம் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், சிபிஐ எம்.எல். லிபரேசன் மாநிலச் செயலாளர் பழ.ஆசைதம்பி கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது

இனவெறி பிடித்த இஸ்ரேல் பாலஸ்தீன மக்களை அடியோடு அழித்து விட வேண்டுமென்று வெறித்தனமானத் தாக்குதலை அக்டோபர் 7 ஆம் தேதி முதல் நடத்தி வருகிறது. இந்த மனிதாபிமானற்ற தாக்குதலில் இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள், குழந்தைகள், பெண்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளர். பல்லாயிரம் பேர் படுகாயமுற்று உயிருக்குப் போராடி வருகிறார்கள். லட்சக்கணக்கானமக்கள் உடைமைகளையும், இருப்பிடங்களையும் இழந்து அகதிகளாக அலைந்து வருகின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்திய அரசின் ஆதரவுடன் இஸ்ரேல் நடத்தும் ராணுவத் தாக்குதல் போர் நியதிகள் அனைத்தையும் நிராகரித்து பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், மக்கள் குடியிருப்புகள் என நாடு முழுவதும் இடைவிடாது குண்டு மழை பொழிந்து வருகிறது. இதில் ஐக்கிய நாடுகள் சபை அலுவலர்கள், செஞ்சிலுவை சங்கத்தினர் உட்பட பலரும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

தாயக உரிமைக்காகப் போராடி வரும் பாலஸ்தீனமக்களுக்கு இந்தியநாடு ஆரம்ப காலத்தில் இருந்து ஆதரவு தெரிவித்து வருகிறது. இந்த வழிவழியான சமாதான ஆதரவு நிலையில் இருந்து பாஜக ஒன்றிய அரசு முற்றிலும் மாறுபட்டு, அமெரிக்க அரசோடும், அதன் வழி இஸ்ரேலுடன் இணைந்து நின்று பாலஸ்தீன மக்களை கொன்றழிக்கும் கொடுங்குற்றத்துக்கு துணை போகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுசபைக் கூட்டத்தில் போர் நிறுத்தம் குறித்த தீர்மானத்தை ஆதரிக்காமல் பாஜக ஒன்றிய அரசு இஸ்ரேலுக்கு ஆதரவான நிலை எடுத்தது. இந்த நிலையில் அமெரிக்க அரசின் செயலாளரும், பாதுகாப்புத்துறை செயலாளரும் இந்தியா வந்து நமது ஒன்றிய அரசின் பாதுகாப்பு மற்றும் அயலுறவுத்துறை அமைச்சகங்கள் மட்டத்தில் 7.11.2023 முதல் 10.11.2023 வரை பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இதில் பாஜக ஒன்றிய அரசு இஸ்ரேல் போர் நிறுத்தத்தை அறிவிப்பதற்கு நிர்ப்பந்திக்க வேண்டும். அமெரிக்க அரசு இஸ்ரேலுக்கு வழங்கி வரும் ராணுவ ஆயுதங்கள், நிதியுதவிகள் நிறுத்தப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை மிகப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய போர் நிறுத்தம் உடனடியாக ஏற்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் பாலஸ்தீனர்களின் நீண்ட போராட்டத்துக்கு தீர்வாக முன்மொழிந்துள்ள இரு நாடுகள் கொள்கை ஏற்கப்பட்டு, 1967க்கு முந்தைய நிலையில் மேற்கு ஜெருசலேத்தை தலைமையிடமாக கொண்டு சுதந்திர நாடாக பாலஸ்தீனம் ஏற்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என பொதுமக்களிடம் 14.11.2023 முதல் 16.11.2023 வரை தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, வட்டார அளவில் பரப்புரை இயக்கம் நடத்துவது என்றும், 20.11.2023 தலைநகர் சென்னையில் கட்சியின் மாநிலத் தலைவர்கள் பங்கேற்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அயலுறவு கொள்கையைப் பாதுகாக்க நீடித்த சமாதானம் நிலவ வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தி நடைபெறும் பரப்புரை இயக்கம், மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இடதுசாரி கட்சிகள் அழைக்கின்றன என்று தனது அறிக்கையில் கூறியுள்ளனர்.

# கலை இலக்கிய செய்திகள்

### நூல் அறிமுகம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோவை கிழக்கு சார்பில் ‘சர்ரியல் இரவுகள்’ சிறுகதை அறிமுகம் கே.நடராஜ் தலைமையில் நடைபெற்றது.

முனைவர் ந.ராஜேந்திரன் சிறுகதைகளை சிறப்பாக எடுத்துரைத்தார். முனைவர் பொ.உத்திரகுமார் ஆய்வுரை நிகழ்த்தினார். இர.முருகவேல் ஏற்புரை நிகழ்த்தினார். மணிகண்டன் நன்றி கூறினார்.

### கருத்தரங்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டக்குழு, அனைத்திந்திய முற்போக்குப் பேரவை மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்புப் பேரவை இணைந்து முன்னெடுத்த ‘பாலஸ்தீனப் பிரச்சினையும் தீர்வுகளும்’ எனும் தலைப்பில் கருத்தரங்கம் சென்னை, இராயப்பேட்டையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுவடு மன்சூர் அகமது வரவேற்புரை ஆற்றினார். த. க. இ. பெ. சென்னை மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ தலைமை தாங்கினார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநிலத் துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் தேசியச் செயலாளர் டி.எஸ். நடராஜன் ‘பாலஸ்தீனப் பிரச்சினையும் தீர்வுகளும்’ குறித்து விரிவான உரை ஆற்றினார். அனைத்திந்திய முற்போக்குப் பேரவை பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் சிறப்புரை ஆற்றினார். சிறுபான்மையினர் பாதுகாப்புப் பேரவை முகம்மது மாரீஸ் சிறப்புரை ஆற்றினார்.

இறுதியில் பீட்டர் பால்ராஜ் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் திரளான தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்

# நவம்பர் புரட்சி தின விழா கோலாகல கொண்டாட்டம்

நவம்பர் புரட்சி தின விழா தமிழகம் முழுவதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அரங்கங்களின் சார்பாக கொண்டாடப்பட்டது.

**விருதுநகர்:**

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில், தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்ஏல்ஏ கொடி ஏற்றிவைத்தார். இராஜபாளையம் செட்டியார்பட்டியில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்தி தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி கொடி ஏற்றினார், சாத்தூரில் வட்ட செயலாளர் சாமிநாதன் தலைமையில் தகஇபெ மாநில பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம் கொடி ஏற்றி வைத்தார், எஸ்.பழனிக்குமார் பேசினார், இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமையில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ரவி கொடி ஏற்றினார், சத்திரப்பட்டியில் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் தலைமையில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி கொடி ஏற்றினார், ஆலங்குளத்தில ஜெயபிரகாஷ் தலைமையில் கட்டிடதொச மாவட்ட செயலாளர் நடராஜன் கொடி ஏற்றினார், சிவகாசியில் வட்ட செயலாளர் ஜீவா தலைமையில் மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம் கொடி ஏற்றினார், விருதுநகில் ஒன்றிய செயலாளர் சக்கணன தலைமையில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ஏற்றினார் மற்றும் மாவட்டம் முழுவதும் கொடி ஏற்றப்பட்டது.

**திருச்செங்கோடு**

நவம்பர் புரட்சி தின கொடியேற்று விழா திருச்செங்கோடு நகர கட்சி அலுவலகத்தில், நகர செயலாளர் எஸ்.சுகுமார் தலைமையில், ஒன்றிய செயலாளர் பி.எஸ்.முனுசாமி முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் க.அன்புமணி கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தஒவாஇ ஜி.லோகநாதன் நன்றி கூறினார்.

***மணப்பாறை:*** மணப்பாறை கட்சி அலுவலகத்தில் புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி தலைமையில் ஏஐடியுசி போக்குவரத்து கழக மாநில துணைப் பொதுச்செயலாளர் சுப்ரமணியன் கொடி ஏற்றி உரை நிகழ்தினார்.

***மதுரை:*** மதுரை மாநகர் மாவட்ட தெற்கு பகுதி குழுவின் சார்பாக ஜெய்ஹிந்த்புரம் பாரதியார் ரோடு, சந்திப்பில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கட்சியின் தெற்கு பகுதி செயலாளர் பா.சுமதி, இஸ்கப் மாவட்ட செயலாளர் இரா.ஜெயராமன் உட்பட பலர் கலந்து கொண்டார்.

***கரூர்:*** க.பரமத்தி தெற்கு ஒன்றிய எலவனூரில் ஒன்றிய செயலாளர்








ஆர்.குப்புசாமி தலைமையில், கரூர் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே. குப்புசாமி கொடியேற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

***திண்டுக்கல்:*** கட்சியின் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் பஸ் ஸ்டாண்டில் ஜி. ராமமூர்த்தி கொடியேற்றினார். ஆத்து மேட்டில் ஒன்றிய துணைச் செயலாளர் எம்.பி.கனிவேல் கொடியேற்றினார். குரும்பட்டியில் ஆறுமுகம் கொடியேற்றினார். ஒன்றிய செயலாளர் சி.எஸ்.முத்துசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.சந்திரசேகரன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தலைமையில், நகரச் செயலாளர் ராஜாங்கம், துணைச் செயலாளர் சுப்பிரமணி, பிச்சைமணி, அலுவலக செயலாளர் சுப்பையா, நாகல் நகர் செயலாளர் மணிவேல், இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் பிரபாகரன், ஜனசக்தி பொறுப்பாளர் பி.கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

***சேலம்***: சேலம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் கொடியேற்றி வைத்தார். மாவட்ட துணைச்செயலாளர் எம்.ராமன், மூத்த தோழர் கே.சுவாமிநாதன் லெனின் படத்திற்கு மாலை அணிவித்து உரையாற்றினார். ஏஐஒய்எஃப் மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ் நன்றி கூறினார்.

***தஞ்சாவூர்:*** தஞ்சாவூர் கட்சி அலுவலகத்தில் மாநகரச் செயலாளர் ஆர்.பிரபாகர் தலைமையில், மாவட்ட குழு உறுப்பினர் வெ.சேவையா நவம்பர் 7 புரட்சி நாள் கொடியினை ஏற்றி வைத்தார்.

***வடசென்னை:*** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக ஆர்.கே.நகர் பகுதியில் லெனினும் ரஷ்ய புரட்சியும் என்கிற ஆங்கில ஆவணப்படத்தை தமிழில் மொழியாக்கம் செய்து திரையிடல், கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.மேலும் என்.சி.பி.எச். வெளியிடான ரஷ்ய புரட்சிகள் என்கிற புத்தகத்தை தோழர்களுக்கு அறிமுகம் செய்து விற்பனை செய்யும் இயக்கமும் நடைபெற்றது.

நிகழ்வுக்கு மாவட்ட துணை செயலாளர் எம்.ஜெய்சங்கர் தலைமையேற்றார். மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார் ஆவணப்படத்தை மொழியாக்கம் செய்தார். என்.எப்.ஐ.டபிள்யு மாநில தலைவர் ஜி.மஞ்சுளா, என்.எப்.ஐ.டபிள்யு மாவட்ட செயலாளர் டி.செண்பகம், வழக்குரைஞர்கள் தேசிங், அசோகன் ஆகியோர் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.கருணாகரன், பெரம்பூர் பகுதி செயலாளர் கோட்டி சுரேஷ், 42வது வார்டு மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா, ஏஐஒய்எப் மாவட்ட செயலாளர் ஆ.சுரேஷ், ஏஐஎஸ்எப் மாவட்ட தலைவர் இரா.இராமசாமி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

மூத்த தோழர் எம்.எஸ்.மூர்த்தி நிறைவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி நன்றி கூறினார்.

***கோவை:*** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமையில் மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான கே.எம்.செல்வராஜ் கொடியை ஏற்றி வைத்தார்.

கட்சியின் மாவட்ட துணை செயலாளர்கள் ஜே.ஜேம்ஸ், எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வி.ஆர்.பாண்டியன், சாந்தி சந்திரன், கே. வெங்கடாசலம், மத்திய மண்டல துணை செயலாளர் ஏ.பி.மணிபாரதி, மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், மதுக்கரை ஒன்றிய செயலாளர் கே.ஆர். தங்கராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**புதுக்கோட்டை:** புதுக்கோட்டையில் த.செங்கோடன் தலைமையில், தோழர்கள் என்.ஆர்.ஜீவானந்தம், மீரா மொய்தீன், சிங்கமுத்து, சுந்தரராஜன், மணிபாரதி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்

***திருச்சி:*** திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றியம், சோமரசம்பேட்டையில் எஸ். முத்துலெட்சுமி தலைமையில், ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன் கொடியேற்றினார். சோமரசம்பேட்டை பெரியார் சிலை அருகில் ஜெ. நதியா தலைமையில், எம்.மருதாம்பாள் கொடியேற்றினார். எஸ். ஜான்சிராணி தலைமையில், என். பாஸ்கரன் கொடியேற்றினார். சபரிநகரில் கே.என். ஜெகநாதன் தலைமையில் டி.நிர்மலா கொடியேற்றினார். பாரதிநகரில் பி. குமரேசன் தலைமையில், பி. வித்யா கொடியேற்றினார். நாடார் சத்திரத்தில் வியாகுலமேரி தலைமையில், ஜெ. நதியா கொடியேற்றினார்.

# தஞ்சாவூர் ஆர்.எஸ்.பாலு மறைவுக்கு இரங்கல்

தஞ்சாவூர் ஆர்.எஸ்.பாலு மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தஞ்சாவூர் வடக்கு மாவட்டச் செயலாளரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி ஊழியருமான தோழர் ஆர்.எஸ்.பாலு (69) மாரடைப்பு ஏற்பட்டு காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தஞ்சாவூர் நாகப்பட்டினம் சாலையில் உள்ள மாரியம்மன் கோவில் பகுதியில் விவசாயத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த ஆர்.எஸ்.பாலு, சிறு வயது முதலே விவசாயத் தொழிலாளர் இயக்கங்களில் பங்கேற்று வந்தவர்.

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள மகிமாலை என்ற ஊரில் கிராம சங்கத்தில் உறுப்பினர் சேர்ப்புப் பணிக்காக சென்று, ஊர் திரும்பும் வழியில் பேருந்துக்காக காத்திருந்த நேரத்தில் அவருக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டிருக்கிறது.



உடனடியாக அருகில் இருந்தவர்கள் 108 அவசர ஊர்திக்கு தகவல் கொடுத்து வரவழைத்து, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளனர். மருத்துவமனைக்கு சென்று சேர்ந்ததும், அவரது உடல் நிலையை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் உயிர் பிரிந்து விட்டது என்று அறிவித்துள்ளார்.

தோழர் ஆர்.எஸ்.பாலு விவசாயத் தொழிலாளர் சங்கம் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டையும் இரு கண்களாக பாவித்தவர். தன்னலம் கருதாது அர்ப்பணிப்பு உணர்வுடன் பொது வாழ்வில் ஈடுபட்டவர். அவரது மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். செய்தி அறிந்ததும் சங்கத்தின் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர், மாநிலத் துணைத் தலைவர் க.மாரிமுத்து எம்.எல்.ஏ. உள்ளிட்ட தலைவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

**தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் விடுத்துள்ள அறிக்கை**யில் கூறியுள்ளதாவது:

தோழர் ஆர்.எஸ். பாலு விவசாய தொழிலாளர் சங்கத்தில் அர்ப்பணிப்போடு பணியாற்றிய அவரது இழப்பு எளிதில் ஈடுசெய்ய இயலாதது ஆகும். மறைந்த தொழர் பாலுவுக்கு மோகனம்பாள் என்ற மனைவியும், பிரீதிலதா என்ற மகளும் உள்ளனர். மறைந்த தோழர் பாலு குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

உண்டியலில் சேமித்த பணத்தை

# ஆர்.நல்லகண்ணுவிடம் வழங்கிய மாணவர்



சேலம் மாவட்டம் நங்கவள்ளி பகுதியைச் சார்ந்த வி.பாலாஜி அவரது மகன் பா.ஜஸ்டின்கிருபா, ஜலகண்டாபுரத்தில் உள்ள பள்ளியில் +2 வகுப்பு படித்து வருகிறார். இவர் தன்னுடைய உண்டியலில் சேர்த்து வைத்த பணத்தை விடுதலைப் போராட்ட வீரர் இரா.நல்லகண்ணு அவர்களிடம் வழங்கினார். பணத்தை பெற்றுக் கொண்ட இரா.நல்லகண்ணு அவர்கள் கட்சிக்கு ரூபாய் 1000, மாணவர் பெருமன்றத்திற்கு ரூபாய் 500 என பிரித்து வழங்கினர். அப்போது மாணவர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் பா.தினேஷ், தென்சென்னை மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன், மாநில குழு உறுப்பினர்கள் ரா.கார்த்திக் மற்றும் கோபால் சேகர், வீ.சங்கீதா தோழர் குரு ஆகியோர் உடனிருந்தனர்.

கட்டட தொழிலாளர் சங்கம் சார்பில்

# அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம்



**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் ஆலங்குளத்தில் மாவட்ட செயலாளர் நடராஜன் தலைமையிலும் , ம.ரெட்டியபட்டியில் மாவட்ட தலைவர் தங்கராஜ் தலைமையிலும், வேப்பங்குளத்தில் மாவட்ட பொருளாளர் மாரியப்பன் தலைமையிலும், சேத்தூரில் முனியாண்டி தலைமையிலும், அச்சம்தவிழ்த்தான் கணேசன் தலைமையிலும், செல்லம்பட்டியில் லட்சுமணப்பெருமாள் தலைமையிலும், அப்பயநாயக்கன்பட்டியில் ராமதாஸ் தலைமையிலும், லட்சுமியாபுரத்தில் பெருமாள்சாமி தலைமையிலும், எதிர்க்கோட்டையில் கோதண்டராமன் தலைமையிலும், ஏழாயிரம்பண்ணையில் பாண்டி தலைமையிலும், தாயில்பட்டியில் காசிராஜன் தலைமையிலும் ,அருப்புக்கோட்டையில் முனியசமி தலைமையிலும் , மற்றும் வெம்பக்கோட்டை, கீழராஜகுலராமன், மண்டபசாலை மறவர்பெருங்குடி ,மீனாட்சிபுரம், கரிசல்குளம்,கல்லூரணி உள்ளிட்ட 35 மையங்களில் இருந்து அஞ்சல் அட்டைகள் அனுப்பப்பட்டன.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்டத்தில் கட்டட தொழிலாளர்கள் சார்பாக அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் தலைமை தபால் நிலைய அலுவலகம் முன்பு நடைபெற்றது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## ஐ.சி.எப் எஸ்.அப்பு படத்திறப்பு

மறைந்த ஐசிஎப் தோழர் எஸ்.அப்பு அவர்களின் படத்தை துணைத்தலைவர் டி.இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஏஐடியூசி ன் பொதுச்செயலாளர் எம். இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் வெங்கடேஸ்வரன், நிக்சன் ஆப்ரஹாம், சரவணகுமார், மதியழகன், ஜான்டேவிட், ஆனந்தகுமார் மற்றும் குடும்பத்தினர் உறவினர் கலந்து கொண்டனர்.

## வினாடி - வினா விடைகள்

1. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு, 1949ல் உருவாக்கப்பட்டது.
2. சோவியத் ஒன்றியத்தை (USSR) எதிர்ப்பதற்காக.
3. வார்சா (Warsaw) ஒப்பந்த அமைப்பு
4. பெல்கிரேடு நகரில் 1961ல் நடைபெற்றது.
5. 1946ல் இலண்டனில் நடைபெற்றது.
6. உத்திரமேரூர்

# விவசாயி புகாரை பதியாமல் அலைகழிக்கும் திருக்குவளை காவல்துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம்




திருக்குவளை காவல்நிலையத்தில் வாழக்கரையைச் சேர்ந்த விவசாயி கொடுத்த புகார் மனு மீது வழக்கு பதிவு செய்யாமல் ஒருதலை பட்சமாக நடந்து கொள்ளும் போலீஸாரை கண்டித்து, இந்திய கம்யூனிஸ்ட் வாழக்கரை கிளை சார்பாக கண்டன கூட்டம் நடைபெற்றது .

கூட்டத்திற்கு கட்சி மாநில குழு உறுப்பினர் டி.செல்வம் தலைமை வகித்தார் . வாழக்கரை கிளை செயலாளர் சந்திரகாசன், விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய தலைவர் பக்கிரிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் சிவகுருபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் பாஸ்கர், முன்னாள் மாவட்ட செயலாளர் சம்பந்தம் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இப்போராட்டதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.கே. பாபுஜி, மாவட்ட கவுன்சிலர் பி. சரபோஜி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் எம்.கே. நாகராஜன், மோட்டார் சங்க மாவட்ட செயலாளர் எஸ். மேகலா, ஒன்றிய செயலாளர்கள் எம்.காசிநாதன், ஏஐஒய்எஃப் மாவட்ட செயலாளர் டி.சந்திரமோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பழங்குடி மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி குமரியில் ஆர்ப்பாட்டம்

குமரி பழங்குடி மக்கள் பயிரிட்டு வளர்த்த இரப்பர்,அல்பீஸ் மரங்களை வெட்டி மீண்டும் விவசாயம் செய்திட வனத்துறை அனுமதி அளித்திட வலியுறுத்தியும், குமரி மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய்க்கு தனி சிகிட்சை பிரிவு ஏற்படுத்த வலியுறுத்தியும், இருதய அறுவை சிகிச்சை செய்திடும் அளவிற்கு மருத்துவ கல்லூரி மருத்துவமனையை தரம் உயர்த்திட கோரியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் சுகுமாரன் தலைமை தாங்கினார். ஆறுகாணி கிளை செயலாளர் ஆர்.சந்திரன், மஞ் சாலுமூடு கிளைச் செயலாளர் மரியதாஸ், காரோடு கிளைச் செயலாளர் குமார், ஆலங்கோடு கிளைச் செயலாளர் செல்வராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தை கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எஸ். அனில்குமார் தொடங்கி வைத்தார். கட்சியின் தோவாளை தாலுகா செயலாளர் கல்யாணசுந்தரம், கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ் மேசியதாஸ், கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். ஆர்ப்பாட்டத்தை அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம் நிறைவு செய்தனர். ஏராளமான பழங்குடி மக்கள் ஆர்பாட்டத்தில் கலந்து சிறப்பித்தனர்.

# நியூஸ் கிளிக் பத்திரிக்கை மீதான எப்.ஐ.ஆர் நகல் எரிப்பு போராட்டம்




**தஞ்சாவூர்:** டெல்லியில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டம் தொடர்பான உண்மை செய்திகளை வெளியிட்டு, ஆதரவு தந்த நியூஸ்கிளிக்பத்திரிகையாளர் மீதான அடக்குமுறை, உபா உள்ளிட்ட பொய் வழக்குகளை பதிவு செய்து சிறையில் அடைக்கப்பட்டதை கண்டித்தும், பத்திரிக்கை சுதந்திரத்தின் மீதான ஒன்றிய அரசின் தாக்குதலை கண்டித்தும் எப். ஐ. ஆர். நகல் எரிப்பு நாடு தழுவிய போராட்டம் தஞ்சாவூர் ரயிலடி முன்பு நடைபெற்றது.

ஐக்கிய விவசாயிகள் முன்னணி தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.வி.கண்ணன் தலைமை வகித்தார்.ஐக்கிய விவசாயிகள் முன்னணி நிர்வாகிகள் சு.பழனிராஜன், சோ.பாஸ்கர், பி.செந்தில்குமார், அ.பன்னீர்செல்வம், பி.கோவிந்தராஜ், பி.ஜோதிவேல், எம்.பழனியய்யா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, மக்கள் அதிகாரம் மாநில பொருளாளர் காளியப்பன், சிபி எம்எல் இரா. அருணாச்சலம், முஸ்லிம் லீக் எஸ்.எம்.ஜெய்னுல் ஆபிதீன் ஆகியோர் பங்கேற்றனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் சம்யுக்தா கிஷான் மோர்ச்சா ஐக்கிய விவசாயிகள் சங்கம் சார்பில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்டச் செயலாளர் கே. நேரு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்டச் செயலாளர் ஏ. மூர்த்தி, எல். தங்கராஜ், ஜே. வெங்கடேசன், ரேணுகாதேவி, ஆர். கோபி, என். சாரங்கன் தலைமையில் நியூஸ் கிளிக் செய்தி நிறுவனம் மீது பொய் வழக்கு போட்டு சிறையில் இருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று எஃப் ஐ ஆர் காபியை கொளுத்தும் போராட்டம் நடந்தது.

# மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆறுதல்

கோவையில் பெய்த கனமழை காரணமாக கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வெள்ளக் கிணறு பகுதியில் குட்டை நிரம்பி குடியிருப்பு பகுதிகள், மருத்துவ மனை, கால்நடை மருத்துவ மனை ஆகியவற்றுக்குள் மழை வெள்ளம் புகுந்தது.

தகவல் அறிந்த கோவை மக்களவைத் தொகுதி உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்தனர். அங்கு வந்திருந்த மாநகராட்சி அதிகாரிகளிடம் கோவை எம்.பி. கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் உடனடியாக மழை நீர் செல்லும் வழியில் இருந்த அடைப்புகள் ஜே.சி.பி. இயந்திரங்கள் வரவழைக்கப் பட்டு நீக்கப்பட்டது.



# நூறு நாள் கூலி பாக்கியை வழங்க கோரி ஆர்ப்பாட்டம்




**தருமபுரி:** தருமபுரியில் ஜெ.பிரதாபன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சங்க மாவட்ட செயலாளரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினருமான எஸ் தேவராஜ் சிறப்புரையாற்றினார். கட்சி மாவட்ட துணைச் செயலாளர் எம். மாதேஸ்வரன், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் எஸ். சின்னசாமி, ஏஐடியுசியின் மாவட்ட பொதுச் செயலாளருமான கே. மணி, விதொச மூத்த தோழர் சி. விஸ்வநாதன், மாநிலக்குழு உறுப்பினர் ஜி. மாதையன், தருமபுரி ஒன்றிய தலைவர் ஜி. ராஜகோபால், ஒன்றிய செயலாளர் ஜி. பச்சாகவுண்டர், நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர் என். முருகேசன், இண்டூர் வட்டார செயலாளர் பண்ட அள்ளி மாதையன் மற்றும் திரளான விவசாய தொழிலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**நல்லம்பள்ளி:** நல்லம்பள்ளியில் எஸ்.இ.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளரும் தேசியக்குழு உறுப்பினருமான ஜெ. பிரதாபன் விளக்க உரை நிகழ்த்தினார். இதில் ஒன்றிய செயலாளர் என். முருகேசன், மாநிலக்குழு உறுப்பினர் அலமேலு எத்துராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் வெ. பை. மாதையன் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

**அரூர்:** அரூரில் செங்கொடி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் கா. சி. தமிழ்குமரன் சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய செயலாளர் அல்லிமுத்து, இந்தய தேசிய மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் கமலாமூர்த்தி, ஏஐடியுசி மாவட்ட துணைச்செயலாளர் நடராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்,

# ஸ்டேன்ஸ் மில் தியாகிகளுக்கு ஏஐடியுசி சார்பில் அஞ்சலி



கோவை மாவட்டத்தில் முதன் முதலில் துவங்கப்பட்ட பஞ்சாலை, ஸ்டேன்ஸ் மில் ஆகும். இதன் தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தில் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1946 நவ்வம்பர் 11 ம் தேதி நடைபெற்ற போராட்டத்தில் காவல்துறை துப்பாக்கி சூடு நடத்தியது. இதில் 15 க்கும் மேற்பட்டவர்கள் இறந்து போனார்கள். இந்த தியாகிகளை நினைவு கூர்ந்து ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தினர் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சி.சிவசாமி தலைமை தாங்கினார். சங்கத்தின் பொது செயலாளர் எம்.ஆறுமுகம் கொடி ஏற்றி வைத்து அஞ்சலி உரை நிகழ்த்தினார். மில் கிளை தலைவர் விநாயகமூர்த்தி, செயலாளர் ஞானவேல், கிளை பொருளாளர் பழனிசாமி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்ட செயலாளர் ப.பா.இரமணி, கட்சியின் மத்திய மண்டல துணை செயலாளர் ஏ.பி.மணிபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இஸ்ரேல் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

**வேலூர்:** குடியாத்தத்தில் பிரேம்குமார் தலைமையில், ஒன்றிய நகர செயலாளர் டி.ஆனந்தன ஏ.டி.எஸ்.மகேஷ்பாபு, ஆர்.அக்பர், கே.கல்பனா சந்தர் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். . மாவட்ட துணை செயலாளர் துரைசெல்வம் நவம்பர் புரட்சி தின உறுதி மொழி ஏற்பு செய்து வைத்தார்.

**மதுரை:** மதுரை தெற்கு பகுதி ஜீவா நகரில் இந்திய கலாச்சார நட்புணர்வு கழகம் (இஸ்கப்) சார்பாக, பாலஸ்தீன மக்கள் மீதான தாக்குதலை நிறுத்த கோரி இஸ்கப் மாவட்ட செயலாளர் இரா.ஜெயராமன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், ஏஐடியுசி மதுரை மாவட்ட செயலாளர் கே.சேது, கட்சியின் தெற்கு பகுதி செயலாளர் பா.சுமதி, மாதர் சங்க மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி, ஜனசக்தி என்.ஜீவா உட்பட பலர் கலந்து கொண்டார். இஸ்கப் மாவட்ட தலைவர் பாஸ்கரன் நன்றி தெரிவித்தார்.

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை

# ஒப்பந்த பணியாளர்கள் சங்கம் துவக்க விழா

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா அரசு மருத்துவமனை ஒப்பந்த பணியாளர் சங்கம் துவக்கப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., சங்க பெயர் பலகையை திறந்து வைத்தார். ஏஐடியுசி திருவாரூர் மாவட்ட செயலாளர் ஆர். சந்திரசேகர ஆசாத் சங்க கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் கட்சியின் நகர செயலாளர் டி.பி. சுந்தர், ஏஐடியுசி நகர பொறுப்பாளர் ஆர். வாசுதேவன், மன்னார்குடி தலைமை மருத்துவமனை ஒப்பந்த பணியாளர்கள் சங்கத்தின் பொறுப்பாளர் பாப்பையன், காந்தி மற்றும் 25க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனை ஒப்பந்த பணியாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இ.பி.எப் கணக்கை கேட்டு ஆர்ப்பாட்டம்



அரியலூர் நகராட்சி நிர்வாகம் சுகாதாரத் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட 14 வருட இபிஎப் கணக்கை இதுவரை தொழிலாளர்களிடம் ஒப்படைக்கவில்லை, பலமுறை கோரிக்கை விடுத்தும் செவி சாய்க்காத அரியலூர் நகராட்சி நிர்வாகத்தின் அலட்சியப் போக்கை கண்டித்து, அரியலூர் ஏ. ஐ. டி. யூ. சி. சுகாதார தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தலையிட வலியுறுத்தி தஞ்சாவூர் மண்டல இயக்குனர் அலுவலகம் முன்பு, உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளன மாநில செயலாளர் டி.தண்டபாணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தினை ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.சந்திரகுமார் துவக்கி வைத்தார். மாநில செயலாளர் ஆர். தில்லைவனம் முடித்து வைத்து பேசினார். கோரிக்கைகளை விளக்கி அரசு போக்குவரத்து சங்க மாநிலத் துணைத் தலைவர் துரை.மதிவாணன், தெரு வியாபார சங்க மாவட்ட செயலாளர் ஆர். பி. முத்துக்குமரன், மின்சார தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில துணைத்தலைவர் பொன்.தங்கவேல், அரியலூர் மாவட்ட செயலாளர் ரெ.நல்லுச்சாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

# ஐசிஎப் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

ஏஐடியுசி தமிழ் மாநில ஏஐடியூசி பொதுச் செயலாளர் ம.இராதா கிருஷ்ணன் தலைமையில் ஒன்றிய ரயில்வேத்துறை ஐசிஎப் தயாரித்துவரும், வந்தே பாரத் ரயில்பெட்டி தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணியை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவைக் கண்டித்து, ஏஐடியுசி வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை மாவட்டக்குழுக்கள் சார்பில் எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

◆ கோவை மாநகர் வடக்கு மண்டலம் சுப்பநாயக்கன்புதூர் கட்சிகளை உறுப்பினர் எஸ். சண்முகம், ராஜேஸ்வரி ஆகியோரின் மகன் எஸ். அருண் செல்வம், டி. சுகன்யா ஆகியோரின் மணவிழா நடைபெற்றது. இதில் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம், மாவட்ட பொருளாளர் சி. தங்கவேல், மாவட்ட நிர்வாக உறுப்பினர் வி.ஆர். பாண்டியன், கே. வெங்கடாசலம், மாவட்ட குழு உறுப்பினர் கே. ஆர். தங்கராஜ் உள்ளிட்ட உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.2000 அளிக்கப்பட்டது.

◆ சூலூர் வடக்கு வட்டாரம், மயிலம்பட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாக்கியலட்சுமி, செல்வராஜ் ஆகியோரது மகன் எஸ். தினேஷ், காயத்ரி ஆகியோரது திருமணம் நடைபெற்றது. இதில் கட்சியின் வடக்கு வட்டாரகுழு உறுப்பினர் கே.ஆர். குமார், மயிலம்பட்டி ஊராட்சி தலைவர் கு.சாரதாமணி, எம். சிவக்குமார், ஆர். பழனிசாமி, எம். பாலன், வெங்கடேசன், தங்கவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஜனசக்தி வளர்ச்சி ரூ. 2000 அளிக்கப்பட்டது.

◆ சூலூர் வடக்கு வட்டாரம், மயிலம்பட்டி ஊராட்சி முன்னாள் உறுப்பினர், கரையாம்பாளையம் கட்சிகளை உறுப்பினர் ஆர். பழனிச்சாமி, செல்வி ஆகியோரது மகள் பி. பத்மாவதி, கே. ராம்குமார் ஆகியோரின் திருமண விழா நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட நிர்வாக உறுப்பினர் பெ. மௌனசாமி, விவசாய சங்க மாவட்ட தலைவர் சு. பழனிச்சாமி, கட்சியின் வட்டாரக் குழு உறுப்பினர் கே. ஆர். குமார்,பி. பாண்டியன், மயிலம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் கு. சாரதாமணி, எம்.சிவக்குமார் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூபாய் ஆயிரம் அளிக்கப்பட்டது.

◆ சூலூர் வடக்கு வட்டாரம் கட்சியின் வட்டார குழு உறுப்பினர் கே. ஆர். குமார் அவர்களின் சகோதரர் ராமசாமி, சத்யா ஆகியோரது மகன் ஆர். பிரசாந்த், ஏ. மகேஸ்வரி ஆகியோரது மணவிழா நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட நிர்வாக உறுப்பினர் பெ. மௌனசாமி, விவசாய சங்க மாவட்ட தலைவர் சு. பழனிச்சாமி, மயிலம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சாரதா மணி, கட்சியின் வட்டார குழு உறுப்பினர் பி. பாண்டியன், கிளை செயலாளர் எம். சிவக்குமார், எம்.அங்குசாமி கே. நடராஜன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூபாய் ஆயிரம் அளிக்கப்பட்டது.

◆ ஆத்தூர் முகவர் ஏ. ஆர். கே. வசந்தமல்லி ஆகியோரின் பேரன் ஆர்.. ரவிச்சந்திரன், கோமதி ஆகியோரின் மகன் ஆர்.. ஆர். முகிலன், சேலம் மாவட்டம் புதுச்சாம்பள்ளி பி. முருகேசன், வசந்தாமணி ஆகியோரின் பேத்தி, எம். சண்முகசுந்தரம், பிரேமா ஆகியோரின் மகள் தீபிகா ஆகியோரின் திருமண விழா நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ. மோகன், துணை செயலாளர் எம். ராமன், ஏ. கந்தன், மாவட்ட நிர்வாக உறுப்பினர் என். எம். சடையன், ஏ. ஐ. எஸ். எப். மாநில செயலாளர் பா. தினேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மணமக்கள் சார்பாக ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூபாய் 500 அளிக்கப்பட்டது.

# காலிப்பணியிடங்களை நிரப்பிட ஏஐஒய்எப் கோரிக்கை

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்டக்குழு கூட்டம் திருவாரூரில் மாவட்ட தலைவர் சு.பாலசுப்ரமணியன் தலைமையில் மாவட்டசெயலாளர் துரை அருள்ராஜன் முன்னிலையிலும் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரசேகரஆசாத் கலந்துகொண்டு ஆகியோர் பேசினார்கள். கூட்டத்தில், இந்தியாவில் அதிகரித்து வரும் வேலையின்மையைப் போக்க ஒன்றிய, மாநில அரசுகள் உறுதியான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும், அரசுத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும், தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து ஒன்றிய பாஜக அரசு நிரந்தர விலக்கு அளிக்க வேண்டும், தமிழ்நாட்டில் நடத்தப்படும் போதைப் பொருள் விற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும், குடும்ப அட்டை கோரி புதியதாக விண்ணப்பிப்போருக்கு குடும்ப அட்டை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இந்த வார தம்பிக்குறள்

### 139. அளவுக்கு அறிதல்

**அளவுக்கு மிஞ்சி அறிவுரை ஆற்றின்**
**குழப்பந்தான் கூடி வரும்.**

அறிவுரைகளையும் கூட, பிறர்க்கு தேவைக்கேற்ப கூறவேண்டும். அளவுக்குமிஞ்சிய அறிவுரைகளைத் திணித்தால், கேட்பவர்களுக்குக் குழப்பம் தான் உண்டாகும்.

**அறிவு பெருத்தோன் அதமம் பெருத்தோன்**
**உதவான் உலகுக் கவன்.**

அறிவுள்ளவன் தீயவனாக இருந்தானானால் அவனால் உலகுக்குப்பயன் ஏற்படாது. (மாறாக தீமைதான் ஏற்படும்).

# நூல் நயம்

## இஸ்ரேல் ஹமாஸ் போரும் விடுதலையும்




பாலஸ்தீனத்தின் காசா நகர் மீது இஸ்ரேல் ராணுவம் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி வருகிறது. இதில் மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள், மக்கள் தங்குமிடங்கள் என அனைத்தின் மீதும் இந்த தாக்குதல் நடைபெறுகிறது. இதில் ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோர் பலியாகி இருக்கிற செய்தி அனைவரையும் வேதனையில் ஆழ்த்துகிறது. போர் எதற்கும் தீர்வு அல்ல. அமைதியே மனித குலத்தின் தேவை என்கிற கருத்தை வலியுறுத்தும் வகையில் மு.வீரபாண்டியன் எழுதிய, இந்நூல் விளங்குகிறது. காசா மீது இஸ்ரேல் குண்டுகளை வீசுவது மட்டுமல்ல, அந்த மக்களுக்கு குடிநீர், மின்சாரத்தை துண்டித்துவிட்டது. அதோடு மட்டுமல்ல, தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் குண்டு, மற்றும் கொத்து குண்டுகளை பொதுமக்கள் மீது வீசுகிறது. பாலஸ்தீன மக்கள் அகதிகளாக எகிப்து நாட்டிற்கு தப்பி செல்லும் பாதைகளை அடைத்து உள்ளது. இப்படி மனிதாபிமானம் அற்ற வகையில் இந்த போரை இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கிறது. இஸ்ரேலின் பின்னால் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் இருப்பதும், இப்படிப்பட்ட கொடூரமான இஸ்ரேலின் பக்கம் இந்தியா இருக்கும் என்பதை இந்திய பிரதமர் அறிவித்திருக்கிறார். இது அணிசேரா கொள்கையையும், அகிம்சையையும் வலியுறுத்தும் இந்திய மக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இஸ்ரேலில் யூதர்கள் கொல்லப்பட்டாலும், காசாவில் பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டாலும் அது மனித துயர். இதில் கூட மதக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது, பேசுவது வெட்கக்கேடானது. காசாவில், இஸ்ரேலில் நடப்பது மதச்சண்டை அல்ல, விடுதலைக்கான சண்டை.

சொந்த நிலத்தில் தாய் நாட்டை இழந்து அகதிகளாகப்பட்ட பாலஸ்தீன மக்கள் நடத்தும் விடுதலைப் போர் அது. அதை ஒடுக்கும் இஸ்ரேலும் பாதிக்கப்படும் பாலஸ்தீனர்களும் ஒன்றல்ல. விடுதலைப் போர் வேறு, ஆதிக்கத்திற்கான போர் என்பது வேறு. போரை வெறுக்கும் கம்யூனிஸ்டுகள் எப்போதும் விடுதலையின் பக்கம். பாலஸ்தீன் விடுதலையின் பக்கம் நாம் நிற்க வேண்டியதன் அவசியத்தை இந்நூல் வலியுறுத்துகிறது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : மு. வீரபாண்டியன்**
**பக்கம் : 40 விலை: 25**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50**

## நூறு நாள் வேலை அடிப்படை கேள்விகளும் பதில்களும்




கிராமப்புறத்தில் இருக்கும் விவசாய தொழிலாளர்கள், பழங்குடியினர், விளிம்பு நிலையில் இருக்கிற பெண்கள் உள்ளிட்டோரை வாழ்க்கையில் கை தூக்கி விடுகிற ஒரு திட்டமாக இருப்பது தான். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டம் எனப்படும், நூறு நாள் வேலை திட்டம். இந்த திட்டத்தை செயல்படுத்துகிற போது இதில் பங்கேற்கும் மக்களுக்கு எழுகிற சந்தேகங்கள், வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் இந்நூள் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

கிராமப்புறத்தில் ஏழ்மையை ஒழிப்பதிலும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒன்றிய அரசாங்கம் இந்த திட்டத்திற்கான நிதிகளை ஆண்டுதோறும் தொடர்ந்து வெட்டி குறைத்து வந்தாலும், கிராமப்புற ஏழைகளுக்கான இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொடர்ந்து செயல்படுத்தவேண்டும் என்று சங்கங்கள் தொடர்ந்து போராடி வருகின்றன. எனவே இந்த சுரங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள், இந்த சட்டத்தை முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு யாரெல்லாம் வேலை வேண்டி விண்ணப்பிக்கலாம்? எத்தனை நாட்கள் வேலை வழங்க வேண்டும்? வேலை அட்டை பெற என்னென்ன தகுதிகள் வேண்டும்?வேலை அட்டை வேண்டி எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? வேலைஅட்டை வேண்டி விண்ணப்பிக்க என்னென்ன ஆவணங்கள் தேவை? விண்ணப்பித்த எத்தனை நாட்களுக்குள் வேலை அட்டை வழங்க வேண்டும்? வழங்கப்பட்ட அடையாள அட்டை எத்தனை ஆண்டுகளுக்கு செல்லும்? இதுபோன்று பல்வேறு வினாக்களுக்கு இந்த புத்தகத்தில் விடை இருக்கிறது.

சட்ட வடிவில் கொண்டுவரப்பட்டுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உள்ளது. ஏனென்றால் இது ஒரு திட்டம் மட்டுமல்ல இந்திய ஏழைகளின் வாழ்க்கை என்பதை இந்நூல் மிக சிறப்பாக எடுத்துரைக்கிறது. அனைவரும் வாங்கி படிக்கவும்

**–சமரன்**

**பக்கம் : 80 விலை : 50**
**வெளியீடு : தன்னாட்சி, 69, அங்கப்பநாயக்கன் தெரு, சென்னை – 600 001**

### துப்புரவு தொழிலாளர்களுக்கு

# தீபாவளி பண்டிகை கொண்டாட்டமல்ல திண்டாட்டம்!



**ம.இராதாகிருஷ்ணன்**

மக்கள் தீபாவளி கொண்டாட்டத்துக்கு தயாராகிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் சமூக ஊடகங்களில் காணப்பட்ட காணொளிகளில் வைரலான ஒன்று; அதில் ஒரு பெண்மணி மக்களுக்கு அறிவுரைகள் வழங்குகிறார். தூய்மை பணியாளர்கள் தீபாவளி இனாம் கேட்டு வந்தால் தர வேண்டும். அவர்கள் பணி முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்களுக்கு உரிய ஊதியமோ; சமூக பாதுகாப்போ இல்லை. அதனால் அவர்களுக்கு தயங்காமல் இனாம் வழங்குங்கள். இப்படியான கருத்துக்கள் தான் அந்த காணொளியில்



காணப்பட்டது.

இதனைக் கண்ட பலர் “ஐயோ பாவம்” என்று அந்த காணொளியை பரப்பினர். இவர்களுக்கு என்ன ! கம்மியாகவா வாங்குகிறார்கள் என்று கடந்து போனவர்களும் உண்டு.

மற்றொருபுறம் தீபாவளி கொண்டாட்டங்களில் மக்கள் ஈடுபட்டிருந்த அன்று ஊடகங்கள் வெளி யிட்ட செய்திகளில் அரசு மதுபான கடைகளில் விற்பனையான மது பாட்டில்கள் கடந்தாண்டை விட இத்தனை கோடி ரூபாய்களுக்கு கூடுதலாக விற்பனை ஆனது; ஜவுளிக்கடைகளில் இத்தனை கோடி ரூபாய்க்கு துணிகள் விற்பனையானது. இனிப்பு பாக்கெட்டுகள் எத்தனை கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஆட்டுக்கறி, மாட்டுக்கறி, கோழிக்கறி எத்தனை கோடி ரூபாய்க்கு விற்பனையானது என்றெல்லாம் விவரங்களை தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக தீபாவளி கொண்டாட்டத்தின் அடிநாதமான பட்டாசு விற்பனை எத்தனை கோடி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக மக்கள் இவற்றையெல்லாம் பயன்படுத்தி தீபாவளியை கொண்டாடி உள்ளனர். அந்த கொண்டாட்டத்தின் போது வெடிக்கப்பட்ட ஒவ்வொரு வெடியும், ஒவ்வொரு இனிப்பு பாக்கெட்டும், ஒவ்வொரு துணி வாங்கிய பையும், இறைச்சிகளின் கழிவுகளும், அருந்திய மது பாட்டில்களும் குப்பைமேடுகளாக காட்சியளித்தன.

இந்த கழிவுகளை வீசி எறிந்த யாரும் திடக்கழிவு மேலாண்மை விதிப்படி அந்த குப்பைகளை எடுத்து குறைந்தபட்சம் தொட்டிகளில் போட வேண்டும் என்ற உணர்வு கூட இல்லாமல் கொண்டாட்டத்தில் இருந்தனர்.குழந்தைகள் வெடித்த வெடி குப்பைகளை அவர்கள் பெற்றோர்களும் கூட அப்படியே வீதியில் விட்டு தான் சென்றனர்.

இதன் காரணமாகவே நாடு, நகரெங்கும் குப்பை மேடுகளாக காட்சி அளித்தன. இதனை யார் அப்புறப்படுத்துவது? தூய்மை பணியாளர்கள் தானே !

தீபாவளி மட்டும் அல்ல, எல்லாவித பண்டிகைகள், கொண்டாட்டங்கள், பேரிடர்களின் போதெல்லாம் தூய்மை பணியாளர்களுக்கு கொடுமையான திண்டாட்டம் தான்.

மலை மலையாய் குப்பைகள் அகற்றும் பணி முடிவதற்குள், மழையும் துவங்கிவிட்டது. தொடர்ந்து பணிச் சுமையை சுமந்து பாடுபடும் தூய்மை பணியாளர்களுக்கு சமூகமும், அவர்களை வேலை வாங்கும் உள்ளாட்சி அமைப்புகளும், அரசுகளும் உரிய அங்கீகாரம் வழங்கி இருக்கின்றனவா?!

அவர்கள் வேலைக்குரிய ஊதியமும் பாதுகாப்பும் முறையாக வழங்கப்பட்டிருக்கின்றனவா?!என்றால் கேள்விக்குறியே. அய்யோ பாவம் என்பதுவும், வெற்று புகழ் பாடுவதும் போதுமா?

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒப்பந்த, அவுட்சோர்ஸ் பணியாளர்களாகவே வைக்கப்பட்டுள்ளனர். அரசும், அதிகாரிகளும், ஒப்பந்ததாரர்களும் அவ்வப்போது வெறும் வார்த்தைகளால் மட்டுமே புகழ் பாடுகிறார்கள். 2017 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்து தமிழ்நாடு அரசு அறிவித்தது. தமிழ்நாடு அரசு அறிவித்தாலும் அது எங்களை கட்டுப்படுத்தாது, பொருந்தாது என்று பொருந்தாத, சட்டவிரோத வாதத்தை தமிழ்நாடு அரசின் கீழ் இயங்குகிற நகராட்சிகள் நிர்வாகத்துறை, பேரூராட்சிகள் நிர்வாகத்துறை, ஊராட்சிகள் வளர்ச்சித் துறை அதிகாரிகள் வெட்கமோ கூச்சமோ இல்லாமல் கூறி வருகின்றனர்.

நகராட்சிகள் நிர்வாக இயக்குனர் சமீபத்தில் தான் 2017இல் வெளியிடப்பட்ட அரசாணை 62ன் படி குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதனை அமலாக்க கேட்டால் “அரசாணை 62 ஆ, அது எங்கே இருக்கிறது? அதில் என்ன இருக்கிறது என்று கேட்கும் அளவிற்கு தான் மாநகராட்சி, நகராட்சி நிர்வாகங்களின் நிலை உள்ளது.

இத்தனை கடுமையான, கொடுமையான நிலையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மனிதர்களா இல்லையா? அவர்களுக்கும் தீபாவளி கொண்டாட்டம் வேண்டுமா இல்லையா? கொண்டாட்டம் வேண்டும் என்றால் தொழிலாளர்களுக்கு தரவேண்டிய போனஸாவது தர வேண்டுமா இல்லையா? இவற்றையெல்லாம் சிந்திப்பதற்கு கூட மனம் இல்லாமல் அரசு, அதிகார வர்க்கத்தின் சிந்தனையில் வறட்சி ஏற்பட்டுள்ளதே! இந்த சிந்தனை வறட்சி போய் தூய்மை பணியாளர்களுடைய வாழ்க்கையிலும் தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளும் திண்டாட்டம் இல்லாமல் கொண்டாட்டமாக போவது எப்போது?

**தொடர்புக்கு: 8524867888**

# ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் செய்த மனிதநேய செயல்



ஆப்கானிஸ்தான் வீரர்கள் செய்த காரியம் ரசிகர்களை மகிழ்ச்சியின் வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளது. தீபாவளி இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் நிலையில் சாலையோரத்தில் தூங்கிக் கொண்டிருந்த ஏழைகளுக்கு ஆப்கானிஸ்தான் வீரர் குர்பாஸ் பணம் வழங்கி உதவி செய்திருக்கிறார்.

ஆனால் அந்த ஏழைகளுக்கு இது குர்பாஸ்தான் என்று கூட தெரியாது. அந்த அளவுக்கு வறுமையால் அவர்கள் வாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்காக காரிலிருந்து இறங்கி குர்பாஸ் உதவி செய்திருக்கிறார். இதனை அந்த வழியாக சென்ற ரசிகர் ஒருவர் வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பகிர்ந்திருக்கிறார். இதனை பார்த்த ரசிகர்கள் குர்பாசை கொண்டாடி வருகிறார்கள்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களே கிரிக்கெட்டை நம்பி தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்திய வீரர்கள் போல் வருமானம் எல்லாம் கிடைக்காது. ஆனால் தங்களிடம் இருந்த காசை ஏழை மக்களுக்கு கொடுத்து தீபாவளி கொண்டாட உதவிய சம்பவம் ரசிகர்களை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

## எனது பரிசுத் தொகையில் ஒரு பகுதி பாலஸ்தீனத்திற்கு நன்கொடை

**- டென்னிஸ் வீரங்கனை ஓன்ஸ் ஜபேர்**

எனது பரிசுத் தொகையில் ஒரு பகுதியை பாலஸ்தீனத்திற்கு நன்கொடையாக வழங்குகிறேன்.

குழந்தைகள் ஒவ்வொரு நாளும் இறப்பதைப் பார்ப்பது மிகவும் கடினம்.

இது மனவேதனைக் குரியது.

இது அரசியல் செய்தியல்ல, மனிதநேயம்.

நான் வெற்றியடைந்தது மிகவும் மகிழ்ச்சி, ஆனால் சமீபத்தில் மகிழ்ச்சியாக இல்லை.

உலக சூழ்நிலை என்னை மகிழ்ச்சியடையச் செய்யவில்லை.

எனக்கு இந்த உலகில் அமைதி வேண்டும். அவ்வளவுதான்.

இந்த வெற்றியால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.

**- டென்னிஸ் வீரங்கனை ஓன்ஸ் ஜபேர்**




16 ஆம் பக்க தொடர்ச்சி

பங்கேற்கப் பயந்து கொண்டு, பல கோடி பேர் வீடுகளுக்குள் ஒளிந்து கிடக்கும் போது, நீ தெருவில் நின்று முழங்குகிறாயே! அப்படியானால் நீ ஹீரோ தானே'' என்கிறார் அவர். ஒரு தடவை கூட தெருவுக்கு வராதவர்கள் வெட்கப்பட வேண்டும்.

### செனேட்டில் அதிர்ந்த குரல்

நியூ சவுத் வேல்ஸ் மாகாண நாடாளுமன்றத்தில், ஒரு பெண் செனட்டர் சபை அதிர பேசுகிறார்.

"ஆளும் கூட்டணி பாலஸ்தீனத்தை பொருத்தவரை திவால் ஆகிவிட்டது. லேபர் கட்சி, இதயம் இல்லாத, முதுகெலும்பற்ற கோழைகளின் கட்சியாகிவிட்டது. இஸ்ரேல் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்களை கொன்று குவிப்பதை பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள். இஸ்ரேலை கண்டிக்க கூட நீங்கள் முன்வரவில்லை. உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் கேட்கவில்லை.

நீங்கள் ஆள்வதை வேடிக்கை பார்ப்பதற்கு இந்த சபையில் நாங்கள் இல்லை. எதையும் செய்யாத நீங்கள், உங்கள் முதுகில் நீங்களே தட்டிக் கொள்ளுகிறீர்கள். உங்கள் ஏமாற்று தந்திர வார்த்தைகள் இந்த போர்க் குற்றத்தை நிறுத்தப் போவதில்லை. இந்த செனட்டுக்கு நாங்கள் மட்டுமல்ல; மக்களைத் திரட்டி கொண்டு வந்திருக்கிறோம். பாலஸ்தீனத்துக்கு விடுதலை வேண்டும்!'' என்று சொல்லி வெளிநடப்பு செய்கிறார்கள்.

ஐநா சபை கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, குட்டையைக் குழப்புவதற்காக இஸ்ரேல் தூதர் 'இரான் பெண்கள் விடுதலை பெறத் தகுதி படைத்தவர்கள்'' என்றொரு அட்டையில் எழுதிக் கொண்டு உள்ளே வருகிறார்; அவர் துரத்தி அடிக்கப்படுகிறார்.

### யாரோடு நிற்கிறது உலகம்?

கிழக்கு ஜெருசலம், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனம் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைக்கு எதிராக ஐநா சபையில் தீர்மானம் கொண்டு வந்த போது, 145 நாடுகள் அதனை ஆதரிக்கின்றன. வெறும் 7 நாடுகள் மட்டுமே அதை எதிர்த்தன. அதில் 5 நாடுகள் தீவுகளாகும். அமெரிக்காவும் இஸ்ரேலும் உறுதியாக எதிர்கின்றன. இவை மட்டுமே உலகமாகிவிடுமா?

உலகம், பாலஸ்தீனியர்கள் பக்கத்தில்தான் இருக்கிறது. ஆனால் வெறி பிடித்த ஏகாதிபத்தியம் உலகத்தின் குரலை அலட்சியப்படுத்துகிறது. பச்சிளம் பாலகர்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என எந்த வகை தொகையும் இல்லாமல் கொன்று ஒழிப்பது மட்டுமே குறியாக நிற்கிறது.

### முன்னாள் இஸ்ரேல் ராணுவ வீரரின் வாக்குமூலம்

இஸ்ரேல் ராணுவத்தில் பணிபுரிந்த முன்னாள் வீரர் சொல்கிறார்:

"ஜெருசலத்தில் வாழ்வதற்கு மற்றவர்களுக்கு என்ன உரிமை உண்டோ, அதை விட கூடுதலாக பாலஸ்தீனர்களுக்கும் உண்டு. ஆனால் அவர்கள் எங்களைப் போன்றவர்கள் அல்ல.

அவர்கள் எங்களது ராணுவ ஆட்சிக்கு கீழே வாழ்கிறார்கள். நான் அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

அவர்களுடைய வீட்டை சில மணி நேரங்களுக்கு, சில நாட்களுக்கு, சில வாரங்களுக்கு நான் எடுத்துக் கொள்ளலாம். ஏனென்று அவர்களால் கேட்க முடியாது.

நான் முடிவு செய்தால், அவர்களைக் கைது செய்யலாம். அவர்களுடைய வீட்டை இடித்து, தரைமட்டமாக்கலாம். அவர்களுடைய வீட்டின் முன்புற கதவை பூட்டி விட்டு, தெருவுக்குள் இறங்கக்கூடாது என்று ஆணையிடலாம். அவர்கள் வீடு இருக்கும் தெருவில் யூதர்கள் நடந்து



போவார்கள். ஆனால் இவர்கள் சன்னல் வழியாக ஏறி இறங்கி, கொல்லைப்புறம் வழியாக, சந்துகளுக்குள்ளேயே நடமாட



வேண்டும்.

### "நான் தான் பயங்கரவாதி"

எனது ராணுவ சேவையின் துவக்க காலம் இப்படித்தான் இருந்தது. நாள் செல்லச் செல்ல, நான் யாரையும் பாதுகாக்கவில்லை; யாருக்கும் உதவவில்லை என்பதை புரிந்து கொண்டேன். நல்லதற்கும் கெட்டதற்கும் இடையிலான எல்லை எனக்கு சிறு வயதில் இருந்தே கற்றுத் தரப்பட்டு இருக்கிறது.

எனது ராணுவப் பணியில் நல்ல தரப்பில், நான் நிற்கவில்லை. நான் உடைந்து நொறுங்கி விட்டேன். உண்மையில் நான்தான் பயங்கரவாதி என்பதை உணர்ந்தேன்.

என்னுடைய வேலை பாலஸ்தீன மக்களை அச்சுறுத்துவது மட்டுமே! அவர்களை, இஸ்ரேல் வந்தேறிகளைப் பற்றியோ அல்லது இஸ்ரேல் ராணுவத்தை எதிர்த்தோ ஒரு சொல் பேச விடாமல் அச்சுறுத்தி வைக்க வேண்டும். அதுதான் எனக்கு வழங்கப்பட்ட தெளிவான ஆணையின் அர்த்தம்''

எனவே இப்போது போர் நடவடிக்கை தொடங்கியதற்கு பின்னர் அல்ல, அதற்கு முன்னதாகவே கூட பாலஸ்தீனியர்கள் எத்தகைய கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த ராணுவ வீரரின் பேட்டி, வெட்ட வெளிச்சமாக்குகிறது.

### இந்த இழிநிலை ஏன்?

இரண்டாம் உலகப்போரின் போது ஜவஹர்லால் நேருவை சந்திக்க வேண்டும் என்று இத்தாலிய சர்வாதிகாரியான பெனடிக்டோ முசோலினி விருப்பம் தெரிவித்தான். "அந்த ரத்தம் வழியும் கரங்களை நான் எப்படிப் பற்றிக் குலுக்குவேன்'' என்று அழைப்பை நேரு நிராகரித்தார்.

ஆனால் இன்றைய பிரதமர் மோடியோ, இஸ்ரேலின் கொலை பாதகன் நேதன்யாகுவிடம் பேசி "இஸ்ரேல் பக்கம் இந்தியா இருக்கிறது'' என்று அறிவிப்பு வெளியிடுகிறார். ஐநா சபையில் போர் நிறுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, இந்தியா ஆதரித்து வாக்களிக்காமல் நடுநிலை வகித்தது.

சர்வ வல்லமை கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தை, சர்வபரித் தியாகம் செய்து ஓட ஓட விரட்டி அடித்த எம் பாரத நாடே, இந்த இழிநிலை உனக்கா? எமக்கா?

### விடுதலைப் போருக்கு வாருங்கள்!

பாலஸ்தீனத்தின் மீதான தாக்குதல் நாட்கள் நீடிக்க நீடிக்க, அதனை எதிர்த்து சமூக வலைத்தளங்களில் பதிவிடுவது குறைந்து கொண்டு வருகிறது என்று மெட்டா நிறுவனம் கூறுகிறதாம்.

உங்களுக்கும் இதில் பங்கு இருக்கிறது. சமூக ஊடகத்தின் சகல செயலிகளையும் பயன்படுத்துங்கள். இஸ்ரேல் தாக்குதலை எதிர்த்து, பாலஸ்தீன விடுதலைக்கு, போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு பதிவிடுங்கள்.


அது ஒரு போஸ்ட் ஆக இருக்கலாம், ரீல், ஷார்ட், வீடியோ, புகைப்படம், கார்ட்டூன் உள்ளிட்ட எந்த வடிவத்திலும் இருக்கலாம். ஒரு பதிவு கூட இல்லாமல் ஒரு நாள் போகக்கூடாது.

இந்திய ஊடகங்கள் வாலாட்டிக் கொண்டு இருக்கின்றன. வலைத்தளங்களில் நீங்கள் வாளேந்துங்கள்!

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 18.11.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# “நான் ஜெனா! காசாவில் என் வீட்டை நேசிக்கிறேன்! அங்கு போக முடியாது குண்டுகள் விழுந்து கொண்டே இருக்கின்றன!”









டி.எம்.மூர்த்தி

**இந்த வெடிச்சத்தம் எப்போது ஓயும் என்று சலிப்பாக இருந்தது, தீபாவளி நாளன்று. காற்று மாசுபட்டிருப்பதால் சுவாசக் கோளாறு உள்ளவர்கள் வெளியே செல்ல வேண்டாம் என்று உடல் நல அறிவிப்பு வேறு.**

## இது மனிதநேய பிரச்சனை!

புவியின் இன்னொரு பக்கத்தில், பட்டாசு அல்ல, நிஜமான வெடிகுண்டுகள் இரவும் பகலும் விழுந்து விழுந்து, வீடுகளும் கட்டிடங்களும் நொறுங்கிக் கொண்டே இருக்கின்றன. விலங்குகளைக் கொல்வதற்கும் விதிகள் வகுக்கப்பட்டு இருக்கும் இந்த உலகில், மனிதர்கள் கொத்துக்கொத்தாய், ஆயிரம் ஆயிரமாய் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

பாலஸ்தீனிய பிரச்சனை ஒரு இஸ்லாமிய பிரச்சனை அல்ல. அது ஒரு அராபிய பிரச்சனையும் அல்ல. அது மனிதநேயப் பிரச்சினை. நீங்கள் இந்த நேரத்தில் பாலஸ்தீனர்களை ஆதரிக்க முடியவில்லை என்றால் உங்களது மனிதம் கேள்விக்குரியது !

பாலஸ்தீனியர்களின் குரல் வெளியே கேட்டு விடாமல் அவர்களது கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறது இஸ்ரேல்.

## நிக்கி, உனக்கு கண் இல்லையா?

நியூயார்க், சிக்காகோ, லண்டன், ஸ்காட்லாந்து, அயர்லாந்து, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ஸ்வீடன், ஆம்ஸ்டர்டேம், கிரீஸ், தென்கொரியா, ஏமன், ஜோர்டான், மொராக்கோ, துருக்கி, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், ஆஸ்திரேலியா என எல்லா நாடுகளிலும் நகரங்களிலும் பல லட்சக்கணக்கான மக்கள் பாலஸ்தீனத்தை விடுதலை செய் என வீதிகளுக்கு வந்து முழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

போரை ஆதரிக்கும் தங்கள் அரசுகளை கண்டித்து மட்டுமல்ல, அமெரிக்காவில் அதிபர் தேர்தலுக்கு போட்டியிடப் போகிற, குடியரசு கட்சியைச் சேர்ந்த நிக்கி ஹாலே என்பவர், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவிடம், ஹமாசை ஒழித்து விடுங்கள் என்று பேசியதற்கும் கண்டிக்கிறார்கள்.

“நிக்கி, நிக்கி உனக்கு கண் இல்லையா
கொலை செய்பவனுக்கு நீ துணையா
ஹாலே, ஹாலே மறைக்காதே
இனப்படுகொலைக்கு உதவாதே
நிக்கி ஹாலே நீ பார்ப்பாய்
பாலஸ்தீன விடுதலையை !”

என்னும் கோஷங்கள் அங்கு விண்ணைப் பிளக்கின்றன.

## குழந்தைகளை இவ்வாறா நடத்துவீர்கள்!

ஒரு ஐந்து வயது நிறையாத பாலஸ்தீனிய குழந்தை



பேட்டி அளிக்கிறது:

“என் பெயர் ஜெனா. நான் காசாவில் வசிக்கிறேன்.

இங்கு சூழ்நிலை நன்றாக இல்லை. காலையிலும், இரவிலும் குண்டுகள் விழுந்து கொண்டே இருக்கின்றன.

எங்கள் வீடுகள் நடுங்குகின்றன. அவை அசைந்து அசைந்து மெதுவாக விழுந்து கொண்டிருக்கின்றன.

எனது அம்மா எங்களை இறுக கட்டி அணைத்துக் கொள்கிறார்.

எங்களை பாதுகாக்க அவருக்குத் தெரிந்த வழி அதுதான். நாங்கள் குழந்தைகள் ! குழந்தைகளை இவ்வாறு நடத்துவது நல்ல செயல் அல்ல.

நாங்கள் குடும்பங்கள். நாங்கள் ஓடிக் கொண்டே இருக்கிறோம். எனது வீட்டை மிகவும் நேசிக்கிறேன். ஆனால் அங்கே நாங்கள் போக முடியாது. அங்கு குண்டுகள் விழுந்து கொண்டே இருக்கின்றன”

பால்மணம் மாறாத முகமும், மழலை மாறாத குரலும் கொண்ட அந்த குழந்தையின் சொற்களைக் கேட்டு கலங்காதவர் மனிதப் பிறவியாக இருக்க முடியாது.

## குழந்தையும் தெய்வமும்:

லண்டனில் நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் குழந்தைகள் கலந்து கொள்கின்றன. அந்தக் குழந்தைகளிடமும் பேட்டி எடுக்கப்படுகிறது.

அதில் ஒரு சிறுவனிடம் உலகிற்கு ஏதேனும் செய்தி சொல்கிறாயா? என கேட்கும் போது ‘பாலஸ்தீனத்தை விடுதலை செய்யுங்கள்” என்கிறான். பாலஸ்தீன சிறுவர்களுக்கு செய்தி இருக்கிறதா? என்றால் “பாலஸ்தீன குழந்தைகள் எங்களைப் போல வாழ வேண்டும். வலிமையாக இருங்கள் ! நீங்கள் ஒரு நாள் விடுதலை அடைவீர்கள்” என்கிறான்.

“உன் மீது அன்பு செலுத்துகிறேன். நீயும் என் குடும்பத்தில் ஒருத்தி. கவலைப்படாதே ! உதவி உனக்கு சீக்கிரம் வரும். இதற்கும் ஒரு முடிவு வரும்” என்று முகம் தெரியாத பாலஸ்தீன சகோதர சகோதரிகளுக்கு தேறுதல் சொல்லி ஆற்றிக் கொள்கிறது ஒரு இங்கிலாந்து குழந்தை.

## நீ ஹீரோ!

இன்னொரு குழந்தை அடி வயிற்றில் இருந்து ‘குழந்தைகளை கொல்லாதே” என்று முழக்கமிடுகிறது. பத்திரிகையாளர் அதனிடம் “நீயும் ஒரு ஹீரோதான்” என்கிறார். “எப்படி” என்கிறது குழந்தை.

“இந்தக் கொடுமைக்கு எதிரான இயக்கங்களில்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.